524

# ஜகன்மோகினி

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
1939

ஆசிரியை
வை.மு.கோதைநாயகி அம்மாள்



## கானல் நீர்

கானல் நீரல்லவோ மானிட வாழ்க்கை !
கருத்தி லறிவ தில்லையே. (கா)

தோன்றுவனவெல்லாம் தோற்றத்தில் பலியாது
தோன்றிய தோற்றமே தோல்விக்குத் துணையாம். (கா)

நாடுவதொன்றும் நடப்பது ஒன்றும்
நாடகமாம் இதை நன்கறிவாய் நெஞ்சே. (கா)

* * * * *

**வெறிபிடித்த மோகம் என்னென்ன செய்யும் ?**

1. உத்தம நீதிகளை உதறித் தள்ளச்செய்யும்.
2. பெற்ற தாயைப் பரிதபிக்கச் செய்யும்.
3. குலத்தின் கவுரவத்தையும் மான ஹீனத்தையும் அறவே மறக்கச் செய்யும்.
4. பணப் பேராசையினுல் பல கொடுந்தொழில்களையும் புரியச் செய்யும்.

* * * * *

**கபட உலகத்தின் போக்கை உள்ளே தொடர்ந்து படியுங்கள்**

ஜூன் 1939

## கபட உலகம்

அணா 2

16-வது ஆண்டு
ஆரம்பம்
ஜனவரி 1939

# ஜகன்மோகினி

ஆசிரியை:
வை. மு. கோதைநாயகி அம்மாள்

வருஷ சந்தா
ரூ. 1—8
தனிப் பிரதி
அணா 2

ஆங்கில மாதம் முதல்தேதி வெளிவரும்
தொடர்நாவல் பத்திரிகை

இந்த ஆண்டின் முதல் 5 இதழ்களில் "கஸ்தூரி திலகம்" அல்லது "கானும்ருதம்" முடிந்து விட்டது. கானல் நீ[illegible] கண்டோடிய மானின் கதியைப்போல், மக்களின் வாழ்க்கையி[illegible]த ஏமாற்றங்கள் உள்ளன வென்பதைச் சித்திரித்துக் காட்டும்,

## "கானல் நீர் அல்லது கபட உலகம்"

என்னும் நாவல் இந்த இதழில் ஆரம்பமாகிறது. இது முடிந்ததும், மற்றொரு நாவல் இவ் வாண்டுக்குள் முடிந்து, டிம்மி அளவில் சுமார் 600 பக்கங்கள் கொண்ட 3 நாவல்கள் (அழகிய படங்களுடன் கூடியவை) வெளிவந்து, பின்னர் ரூ. 3-க்கு விற்கப்படுமாதலால், இப்பொழுதே சந்தாதாரர்களாய்ச் சேர்ந்தோ, தனிப் பிரதியாகவோ வாங்கினால் பாதி விலையில் அத்தனை நாவல்களையும் அடையலா மென்பதைக் கவனியுங்கள்.

## வை. மு. கோதைநாயகி அம்மாள், எழுதிய நாவல்கள்.

ரூ. 2-8
வைதேகி
ராதாமணி
சாருலோசனை
பத்மசுந்தரன்
காதலின் கனி

ரூ. 2
நவநீதகிருஷ்ணன்
ருக்மிணிகாந்தன்
சாமளநாதன்
தியாகக்கொடி
மங்களபாரதி

ரூ. 1-12
சண்பகவிஜயம்
கௌரீமுகுந்தன்
ஸாரமதி

ரூ. 1-8
சோதனையின் கொடுமை

ரூ. 1-4
பரிமளகேசவன்
உத்தமசீலன்
இன்பஜோதி
ராஜமோஹன்
அனாதைப்பெண்
வாழ்க்கையின்நாதம்
ஜீவியச்சுழல்
கஸ்தூரி திலகம்

ரூ. 1
சுகந்தபுஷ்பம்
சாந்தகுமாரி
மாயப்ரபஞ்சம்
சந்திரமண்டலம்

அணா 14
கோபாலரத்னம்
புத்தியே புதையல்

அணா 12
கதம்பமாலை

அணா 10
பட்டமோ பட்டம்
மகிழ்ச்சி உதயம்


அணா 8
நளினசேகரன்
வீரவஸந்தா
மூன்று வைரங்கள்
படாடோபத்தின் பரிபவம்
பிச்சைக்காரக் குடும்பம்
ஆனந்தஸாகர்
ப்ரேமப்ரபா
வத்ஸகுமார்
மாலதி

அணா 6
பக்ஷமாலிகா

அணா 4
ஜெயஸஞ்சீவி
சுகுணபூஷணம்
அம்ருததாரா
அன்பின்சிகரம்
ஸரஸராஜன்
உளுத்த இதயம்

"ஜகன்மோகினி" ஆபீஸ், திருவல்லிக்கேணி.

# தியாக பூமி



THE REGISTRAR OF BOOKS
4 JUL 1939
MADRAS

எஸ்.டி.சுப்புலக்ஷ்மி
பேபி ஸரோஜா
பாப நாசம் சிவன்

டைரக்ஷன்
கே.சுப்ரமண்யம்
BABL

டிஸ்ட்ரிப்யூடர்ஸ்

**மதராஸ் யுனைடெட் ஆர்டிஸ்ட்ஸ் கார்ப்பரேஷன்**

'ஜகன்மோகினி' ஜூன் 1939

## நமது விளம்பர விகிதம்

| | | | |
|---|---|---|---|
| ஒரு பக்கத்துக்கு ஒரு முறை | ரூ. 12 0 0 | கால் பக்கத்துக்கு | ,, ரூ. 4 0 0 |
| அரை பக்கத்துக்கு ,, | ,, 6 8 0 | உள்அட்டைக்கு | ,, ,, 15 0 0 |

நீண்ட கால விளம்பரங்களுக்குத் தனிச்சலுகை காட்டப்படும்.


---

## ஸெய்கோன் அன்பர்களுக்கு!

நமது கௌரவப் பிரதிநிதி ஸ்ரீமான். சோ. ராமநாதன், தற்பொழுது ஸெய்கோனில் (110 ரூய். பெல்லரின்) வசிப்பதால், நமது அன்பர்கள் அவரிடம் சந்தாவைச் செலுத்தி, "ஜகன்மோகினி"யையும், இதர நாவல்களையும் பெற்று, ஆதரிக்கும்படிக் கேட்டுக் கொள்கிறோம்.

---

### அன்பர்கள் மன்னிக்கவும்

ஒரு புதிய சந்தா சேர்த்து உதவிய அன்பர்களுக்கு "லேடர் பேபர் பாட்" அச்சிட்டனுப்புவதற்கு, சில எதிர்பாராத காரணங்களினால் தாமதமாய் விட்டது பற்றி மிகவும் வருந்துகிறோம். அடுத்த இதழுக்குள் எல்லோருக்கும் அனுப்பிவிடுகிறோம்.

---

# முற்றிலும் இனாம்

### அடுத்த இதழுக்குள்

2 புதிய சந்தாதாரர்களைச் சேர்த்துக் கொடுக்கும் நமது சந்தாநேயர்களுக்கு,

**ரூ. 1—4—0**

விலையுள்ள நமது நாவல் அல்லது நாவல்கள் இனாமாக அனுப்புவோம். இந்த அபூர்வ சந்தர்ப்பத்தைக் கைவிடாதீர்கள்.

---

# பொன் விழா !!

ஸ்ரீராமஜெயம்.

# ஜகன்மோகினி

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு.

—திருவள்ளுவர்.

ஜகன்மோ கினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி! மனத்தைச் சார்ந்து.

—ஸ்ரீ வீரராகவ கவி.


| மலர் 16 | பிரமாதி ஸூ வைகாசி மீ<br>ஜூன் 1939 | இதழ் 6 |
|---|---|---|


## திருமால் துதி

கதங்கொள் சீற்றங் கருவரை நிகர்த்த
மதங்கொள் யானை மருப்பினை யொசித்த
இதங்கொள் நெஞ்சத் திறைவன்
பதங்கள் பணிகுவை பண்பொடு நெஞ்சே! 1.

பஞ்சின் மெல்லடிப் பையர வல்குல்
கஞ்சத் துறைதரு காரிகை மார்வன்
நெஞ்சத் துறைய நீள்வினை
துஞ்சு மவன்றன் றுளவடி தொழுமின். 2.

மஞ்சார் மணிநிற மாயன் அடியினை
தொழுதெழு மாந்தர் துயரந் தவிர்ந்து
மண்ணினுக் கரச ராகி
விண்முழு தாள்வர் வியன்குடை நிழலே. 3.

குவளைப் போதிற் குலவிய விழியாள்
வதுவை பொருட்டா மால்விடை யடர்த்த
கண்ணன் கழலிணை காணு
எண்ண மின்றி வியம்புவை மனமே! 4.

பவளச் செவ்வாய்ப் பைந்தொடிக் குருவந்
திகழ்த் திருவருள் புரிந்த தெய்வத்
திருவளர் மார்பன் திருவடி
மருவுவை நெஞ்சே மயலொழி தற்கே. 5.

—திரு. ராகவாசாரியர்.

# வெளிநாட்டுச் செய்திகள்

## கானடாவில் ஜார்ஜ் மன்னர் பிரசங்கம்

ஒட்டாவாவில் யுத்த ஞாபகச் சின்னத்தைத் திறந்துவைத்த ஜார்ஜ் மன்னர் கூறியதாவது :—

"பல்வேறு நாடுகளின் துருப்புகள் போவதைக் குறிப்பிடுவதற்கு மேலுள்ள வளைவில், சமாதானம், சுதந்திரம் இரண்டின் உருவங்களையும் காண்கிறோம். இவை யிரண்டும் சேர்ந்திருப்பதில் அர்த்தமுண்டு. சமாதானத்தையும் சுதந்திரத்தையும் நீண்டகாலம் பிரித்துவைத்திருக்க முடியாது. இந்த மகத்தான உண்மையை நிதர்சனமாக ஞாபகப்படுத்தும் இந்தச்சின்னம் உலகத்தின் பெரிய தலைநகரங்களொன்றில் இருக்கத்தான் வேண்டும். சுதந்தரமில்லாமல் சமாதானம் நிலைத்திருக்க முடியாது. சமாதான மில்லாமல் சுதந்தரமும் நிலைத்திருக்க முடியாது."

ஆனால், இது இந்தியாவுக்குப் பொருத்தமில்லை போலும்!

## உலக சமாதானத்துக்காக அமெரிக்காவின் 4-லட்சியங்கள்

1. குறைகளைத் தீர்த்துக் கொள்வதற்காக போரை ஒரு சாதனமாக உபயோகித்துக் கொள்வதேயில்லையென்ற உறுதிமீண்டும் ஏற்படவேண்டும். 2. மிகுதியாயுள்ள தன் ஆயுத பலத்தைப் பிரயோகிப்பதாக பயமுறுத்தும் முறை ஒழிந்து, நியாயமான சம்பாஷணைகளை நடத்தும் முறை ஏற்பாடாக வேண்டும். 3. யுத்த தளவாடங்களின் உற்பத்தியை வரையறுத்து, இறுதியாகக் குறைக்கும் ஒப்பந்தம் ஏற்படவேண்டும். 4. இவற்றுடன் எல்லா தேசங்களிலும் சுபிட்சம் ஏற்படுவதற்காக வர்த்தக, பொருளாதார ஒப்பந்தங்கள் தேசங்களுக்கிடையே ஏற்படவேண்டும்.

## பிரிட்டிஷ் கட்டாய ராணுவ சேவை

நப்பீல்டின் நன்கொடை

கட்டாய ராணுவ சேவைச் சட்டம் ஸர்வகலாசாலை மாணவர்களைப் பாதிக்காதென்றும், ஆனால் படிப்பு முடிந்த ஒரு மாதத்துக்குள் அவர்கள் பயிற்சிக்கு வந்துவிடவேண்டி யிருக்குமென்றும் அறிவிக்கப்படுகிறது. கட்டாய ராணுவ சேவைக்கு அழைக்கப்படுகிறவர்களின் தேகாப்பியாஸத்துக்கும், விளையாட்டுக்களுக்கும் தமாஷான பொழுதுபோக்குக்கும் செலவழிப்பதற்காக லார்ட் நப்பீல்ட் 15 லக்ஷம் பவுனைக் கொடுத்து உதவியிருக்கிறார்.

182033

## 'யாரும் போரை விரும்பவில்லை'

லார்ட் பால்ட்வின் ஊர்ஸ்டரில் செய்ததோர் பிரசங்கத்தின் சாரம் வருமாறு :—

பாஸிஸ்ட் அல்லது நாஜி கொள்கைகளின் பக்தர்கள் என்று சொல்பவர்கள் நீங்கலாக உலகில் யாருமே யுத்தத்தை விரும்பவில்லை. பாஸிஸ்ட், நாஜி தலைவர்கள் பலாத்காரத்தைப் பிரயோகிப்பதெனத் தீர்மானிப்பார்களானால், உலகத்திலுள்ள இதர நாடுகள் ஒவ்வொன்றும் அவர்களைக்கண்டிக்கும். இந்த எதிர்ப்பைச் சமாளித்து நிற்க யாராலும்முடியாது. நெபோலியனாலே கூட செய்ய முடியவில்லை. நெபோலியனால் முடியாததை வேறுயாரும் சாதித்துவிட முடியாது. ஹிட்லரைப் போன்ற அபார சாமர்த்தியசாலி, அத்தகைய ராஜீயத்தவறை இழைப்பாரென்று நம்பக்கூடவில்லை. காலக்ரமத்தில்-ஒருகால் வெகு சீக்கிரம் - இத்தாலி-ஜெர்மனி உட்பட எல்லா நாடுகளிலும் சாதாரண மக்களே ஜெயமடையப் போகிறார்கள்.

## அமெரிக்க நடுநிலைமைச் சட்டம்

நடுநிலைமைச் சட்டத்தை மாற்றுவதற்கு ஆறு அம்சங்களடங்கிய ஒரு திட்டத்தை அமெரிக்க வெளிநாட்டு மந்திரி ஸ்ரீ கார்டெல் ஹல் தயாரித்திருக்கிறார். 1. அமெரிக்க கப்பல்கள் யுத்த எல்லைக்குள் பிரவேசியாமல் தடுப்பது. 2. அமெரிக்கப் பிரஜைகள் யுத்த பிரதேசங்களில் பிரயாணம் செய்யாமல் தடை செய்வது. 3. யுத்தத்தில் இறங்கியுள்ள நாடுகளுக்குப் போகும் ஏற்றுமதிகளின் உரிமை, கப்பலேறுமுன் வாங்கும் நாட்டிற்கு மாற்றப்படவேண்டும். 4. கடன் வசதிகளைப்பற்றி இப்பொழுது இருந்து வரும் ஏற்பாடுகளையே நீடித்து அமுல் நடத்துவது. 5. போரில் ஈடுபட்டிருப்போருக்காக அமெரிக்காவில் நிதி திரட்டுவதை ஒழுங்குபடுத்துவது. 6. தேசீய ஆயுத கண்ட்ரோல் போர்டின் மூலம் ஆயுத ஏற்றுமதி, இறக்குமதிகளைக் கட்டுப்படுத்துவது.

## யூதர்களின் ஒத்துழையாமைத் திட்டம்

வெள்ளை யறிக்கைத் திட்டம் அனுஷ்டானத்துக்குக் கொண்டு வரப்படுமானால் ஒத்துழையாமை இயக்கத்தை நடத்துவ தென்று யூத தேசீயக் கவுன்ஸில் தீர்மானித்திருக்கிறது.

(1) யூத இளைஞர்களை அவசர சந்தர்ப்பங்களுக்கேற்றவாறு இப்பொழுதிருந்தே தயாரிப்பது. (2) சுதேச சாமான்களை ஆதரித்து இறக்குமதிகளும் இறக்குமதி வரிகளும் குறையும்படிச் செய்வது. (3) சர்க்காரின் நிர்வாக ஸ்தாபனங்களுடன் ஒத்துழைக்க மறுப்பது. (4) வரிகொடா இயக்கம். (5) லாபகரமான பொது நல சர்வீஸ்களின் (ரயில், பஸ், மின்சாரம், டெலிபோன், தபால்-தந்தி) உபயோகத்தை ரொம்பவும் கட்டுப்படுத்துவது. இந்த ஐந்து அம்சங்களடங்கிய பகிஷ்காரத் திட்டந்தான் சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது.

# உள்நாட்டுச் செய்திகள்

## ஐ. மா. வில் புதிய ஆசிரமம்

இதுவரையில் கவனிக்கப்படாமலிருந்த ஜான்ஸார்-பவாரைச் சேர்ந்த வாலிபர்களுக்காக ஒரு ஆச்ரமம் ஆரம்பிக்க, ஐ. மா. சர்க்காரின் கிராமாபிவிருத்தி இலாகா தீர்மானித்துள்ளது. இது, வார்தா ஆச்ரமத்தைப் போலிருக்கும். ஆச்ரம வாசிகளுக்குக் கல்வி போதிப்பதுமன்னியில், ஜில்லாவின் கம்பளித் தொழிலை அபிவிருத்தி செய்ய ஒரு சங்கம் ஆரம்பிக்கப்படும். உருளைக் கிழங்கு, இஞ்சி, மற்றுமுள்ள விவசாயப் பொருள்களை விற்பனை செய்வதற்காக ஒரு மார்க்கட்டிங் சங்கம் நிறுவப்படும். பழங்களைச் சேமித்து வைக்கவும் ஏற்பாடுகள் செய்யப்படும். இந்த ஆசிரமம் கலை வளர்ச்சி, தொழில் இரண்டையும் வளர்க்கும்.

## 'ஹிந்தி'யில் எழுதலாம்

"பெனாரிஸ் ஹிந்து சர்வ கலாசாலையில் கணக்கு, விஞ்ஞானம், பாட்டனி, கெமிஸ்டிரி, பிஸிக்ஸ் முதலிய பாடங்களை 'ஹிந்தி'யிலேயே மாணவர்கள் இண்டர்மிடியேட் பரீட்சையில் பதில் எழுதலாம் என்று அனுமதித்துள்ளனராம்."

## கல்யாண ஊர்வலத்தில் விபத்து

"கல்யாண ஊர்வலம் குஷியாக முன்னால் நடந்த சங்கீதக் கச்சேரியைக் கேட்டுக்கொண்டு போய்க்கொண்டிருந்தது. ஜோரான வாண வேடிக்கைகள் நடந்தன. ஏராளமான வாணங்களை ஏற்றிக்கொண்டு ஒரு வண்டியும் போய்க்கொண்டிருந்தது. கஷ்ட காலம். ஒரு தீப்பொறி பறந்து அவ்வண்டியில் விழுந்தது. பட்டாசுகள் ஏககாலத்தில் வெடித்தன. 30 பேருக்குப் பலத்த காயங்களேற்பட்டன. ஒருவர் அங்கேயே இறந்துவிட்டார். 15 பேருடைய நிலைமை அபாயகரமாக விருக்கிறது."

## வாலிபர்களும் புரட்சியும்

வாலிபர்கள் ஏதோ புரட்சி, புரட்சி என்று பேசுகிறார்கள். ரத்தம் சிந்துவதுதான் புரட்சி என்று அர்த்தமல்ல. நமது வாழ்க்கை முறையிலும், சமூகத்திலும் உயர்ந்த மாறுதல்கள் செய்வதே உண்மையான புரட்சி. அந்தப் புரட்சிகளைத்தான் நிர்மாண வேலைகளின் மூலம் காங்கிரஸ் வேலை செய்து கொண்டிருக்கிறது. பெரிய புரட்சிக்காரரான மகாத்மாகாந்தியின் தலைமையின்கீழ் அத்தகைய புரட்சி ஒன்று ஏற்படுத்துவதற்காகத்தான் காங்கிரஸ் வேலை செய்துகொண்டிருக்கிறது."

—டாக்டர் கேர்.

கிரேக்க ஆதிக்கத்திலிருந்து மீட்சி பெறவும்
எவ்வகையிலும் சம்பூர்ண
சுதந்திரத்தை யடையவுமே
இந்தியர்கள் போராடினர்




விவரங்களுக்கு :

ஏஎல். ஆர்எம். கம்பெனி.,
32, ஆதியப்ப முதலி தெரு,
வேப்பேரி : : : : சென்னை.

# நீதி சந்திரிகை

## கடவுள் வாழ்த்து

தளையவிழ்ந்து தேன்பெருகும் தாமரையிற் றங்கும்
இளையவள்தன் பாதம் இறைஞ்சி—வளைகடல்சூழ்
மேதினியோர் நல்லறத்தை மேவத் தெரிந்துரைப்பல்
நீதிசேர் சந்திரிகை நேர்ந்து.

## நூல்

தரும வழி ஒழுகும் தன்மையனை மேலோர்
பெருமையுறக் கூடிப் பிரியார் ;—தருமமிலாக்
கீழ்மக்கட் சேர்ந்து கிளர்வரே கீழோரும் ;
வாழ்மண் உலகின் வனப்பு. க

நல்லோர்கள் நற்குணத்தை நாடாமல் இன்புறார் :
அல்லோர் பிறர்குற்றம் ஆய்ந்துரைப்பர் :—தொல்லைப்
பயில்வினையின் வன்றொடர்பால் பற்று குணங் குற்றம்
வயிரமுறச் சாரும் மதி. உ

மேலோரும் தங்கள் வியன்குணத்தைப் போதித்துச்
சால வணங்கற்குத் தாங்கடவர் :—போலதுவே
வன்கயவர் தாமும் வசைக்குரியார் தங்குணத்தால்
இங்குலகின் தன்மை இது. ௩

சேற்றின் முளைக்கும் செழுங்கமலம் : வன்கனிவாய்
மாற்றில் உயர்பொன் வயங்குமே !—சீற்றக்
கொடியோர் வயிற்றில் குணமுடையோன் தோன்றும் :
படிமீதில் யாரறிவார் பார். ௪

நன்மை பலசெய்ய நாடலினும் தீதொன்று
புன்மையுற நீக்கல் புகழதாம்—பன்மைமிகு
நூலின் பயிற்சியினும் நுண்ணியதோர் நல்லறத்தைக்
கோலி இயற்றல் குணம். ௫

திருக்குறளைக் கற்றுத் தெளிந்தோர் துறந்து
மருக்கிளரும் கானில் மருவார்—செருக்குமுதல்
யாவும் அடங்க இதயம் ஒருப் பட்டார்க்குப்
பூவுலகே வீடன்றோ போற்று. ௬

—திரு. ராகவாசாரியர்.

## வெள்ளையர் பகிஷ்காரம்

"அஸ்ஸாமில் நடக்கும் எண்ணெய் தொழிலாளர் ஸ்டிரைக்கில் வெள்ளையர் பாடு திண்டாட்டமாய்விட்டது. அவர்களிடமிருந்த வேலைக்காரர்கள் போய்விட்டதால், எல்லா வேலைகளையும் அவர்களே செய்ய வேண்டியிருக்கிறது. கடைத்தெருக்களுக்கு வெள்ளையர்கள் போனால், ஒன்றுக்கு இரண்டு விலை."

## பாஸிஸ்டுகள் யார்?

சர்வதேசநிலைமை நம்மைப் பாதிப்பது உண்மையே! ஆனால், உள்நாட்டு நிலைமை அதைவிட அதிகமாய்ப்பாதிக்கிறது. பாஸிஸ்ட்சக்திகள் ஏகாதிபத்ய எதிர்ப்பு வார்த்தைகளைச் சொல்லிக்கொண்டு நம் நாட்டிலும், நம் தேசீய ஸ்தாபனத்திலும் கூட அதிகாரமும் பலமும் பெற்றுவிடக்கூடும். காங்கிரஸ் காரியக் கமிட்டி பாஸிஸ்ட் முறைகளைக் கையாளுவதாக சில சமயங்களில் கூச்சல் போடுகிறார்கள். அவர்கள் சில சமயங்களில் சர்வாதிகார தோரணையில் நடந்துகொண்டிருக்கிறார்களென்பது உண்மையே. ஆனால், அவர்கள் பாஸிஸ்ட் முறையைக் கையாளுகிறார்களென்று சொல்வது சொல்பவர்களின் அறியாமையைக் காட்டுவதாகும். இன்று நாட்டில் வேண்டிய அளவு பாஸிஸம் இருக்கிறது. காங்கிரஸுக்குள்ளேயேகூட கொஞ்சம் இருக்கிறது. முக்கியமாக வகுப்புவாத ஸ்தாபனங்களிலும் சில "அரசியல் கலப்பற்ற" ஸ்தாபனங்களிலும்தான் அது வளருகிறது. ஆனால், பழைய காங்கிரஸ் தலைவர்களிடம் வேறு என்ன குறைகளிருந்த போதிலும், பாஸிஸத்துக்கும் அவர்களுக்கும் வெகு தூரம். ஆனால், காரியக்கமிட்டியைப் பாஸிஸ்ட் என்று பலமாகச் சொல்லுபவர்கள்தான் காங்கிரஸிலுள்ள பாஸிஸ்டுகள். இதுதான் விசித்திரம்."

—ஸ்ரீ. ஜவஹர்லால் நேரு.

## காந்திஜியின் கொள்கைகளே வெற்றியடையும்

மகாத்மாவின் கொள்கைகள் இந்தக் காலத்திற் கேற்றவை இல்லையென்று ஒரு விவாதம் சொல்லப்படுகிறது. நாம் நவீனர்களாயிருக்கவேண்டுமானால், அடிப்படை கொள்கைகளே அப்படியிருக்க வேண்டும். வெளிப் பார்வைக்கு மட்டும் அப்படியிருந்தால் போதாது. அந்தத் திருஷ்டியுடன் பார்க்கும்போது, காந்திஜிதான் சிறந்த நவீன கொள்கைகள் உடையவர். அஹிம்ஸைதான் மகாத்மாவின் அடிப்படையான கொள்கை. கடைசியில் கொஞ்சம் கொஞ்சமாக உலகம் பூராவுமே இதை ஏற்றுக் கொள்ளப்போகிறதென்பதை யாவரும் ஒப்புக்கொண்டுதானாக வேண்டும். மகாத்மா பழங் காலத்துக் கொள்கையுடையவரல்ல. இந்தக்காலத்திற்கு ஏற்காத அவ்வளவு தீவிர போக்குடையவரென்று கூடச் சொல்லலாம். அவர் அனுபவ சாத்தியவாதி அல்லவென்றும் சொல்லலாம். ஆனால் அவர் மனிதவர்க்கத்தின் முன்னேற்றத்தைத்தடைப்படுத்தமுயன்றார் என்று யாருமே சொல்லமுடியாது.

எப்படி யிருந்த போதிலும் அவர் எந்தக்காரியத்தை எடுத்தாலும் அதற்குப் பலன்களைக் கண்டிருக்கிறோம்.

அவரைக் கண்டித்துப் பேசுவது நன்றி கெட்டத்தனம். காந்திஜியின் தலைமை அவசியமென்பதை எல்லோரும் உணர்ந்திருக்கிறார்கள். இங்கிலீஷ்காரர்கள்கூட இதை உணர்ந்திருக்கிறார்கள். அப்படித் தெரிந்தும் காந்திஜியைத் தாக்குவதுதான் விசித்திரம். —ஸ்ரீ. கிருபளானி.

"காந்தீயத்தையே பின்பற்றுங்கள். அதுதான் தேசத்திற்கு மட்டுமல்ல, மனிதவர்க்கத்துக்கே சுதந்தரத்தை அளிக்கும்." —ஸ்ரீ தேசபாண்டே

## ஸ்திரீகளின் விடுதலை

"நமது நாட்டு ஸ்திரீகள் இன்னும் அதிகமாக விடுதலைப் போராட்டத்தில் பங்கெடுத்துக்கொண்டிருந்தால், இப்பொழுதுள்ளதைவிட எவ்வளவோ மடங்கு அதிகமாக நமக்குச் சுதந்திரம் கிடைத்திருக்கும். இப்பொழுது ஏற்பட்டிருக்கும் ஸ்திரீகளின் விடுதலைக்கும் காந்தீயமே காரணம். மனித வர்க்கத்தை முன்னேறச் செய்யும் எந்த இயக்கங்களிலும் ஸ்திரீகள் மிகவும் திறமையுடன் வேலை செய்ய முடியு மென்பதையும் காந்தீயமே எடுத்துக் காட்டி யிருக்கிறது." —டாக்டர் ராஜன்.

# சென்னை அசெம்பளிக்கு புது தேர்தல் முறை

சென்னை சர்க்கார் விளம்பர இலாகா மந்திரி பின்வரும் அறிக்கையை வெளியிட்டிருக்கிறார்:—" மாகாண அஸெம்பிளிகள் " சம்பந்தமாகப் பிரிட்டிஷ் சர்க்கார், 1936-ல் பிறப்பித்த கவுன்சில் உத்தரவுப்படி பின்கண்ட தொகுதிகளுக்கு குவியல் ஓட்டுமுறையை ஏற்படுத்தியிருக்கிறார்கள்:—

போதுத் தொகுதி:—

| | | |
|---|---|---|
| (எ) | ஹரிஜனங்களுக்கு ஸ்தானங்கள் ஒதுக்கி வைத்தது. | 30 |
| (பி) | ஸ்தானம் ஒதுக்கி வைக்காதது. | 5 |
| | மகமதியர் தொகுதி. | 2 |
| | மொத்தம். | 37 |

ஒரு 'தொகுதி'யில் எத்தனை ஸ்தானங்கள் இருக்கின்றனவோ அத்தனை 'ஓட்டுகள்' ஒரு ஓட்டருக்கு. அந்த ஓட்டுகளைச் சேர்ந்தாற்போல் 'ஒருவருக்கே'யோ அல்லது 'பிரித்துப் பிரித்து' யார் யாருக்கு இஷ்டமோ அவர்களுக்குக் கொடுக்கலாம். இந்த முறைதான் 'குவியல் வோட்டு' முறை என்பது. 1937-ம் வருஷம் செப்டம்பர்மாதம் 29-ந் தேதி சென்னை அசெம்பளி மேலே குறிப்பிட்டிருக்கும் தொகுதிகளில் அமுலில் இருந்துவரும் குவியல் ஓட்டு முறையை மாற்றிப் பங்கிடு ஓட்டு முறையை ஏற்படுத்த வேண்டுமென்று இந்தியா மந்திரிக்குச் சிபார்சு செய்தது. நமது மாகாண சர்க்காரின் சிபார்ச்சை இந்தியா மந்திரி ஏற்றுக்கொண்டு கௌன்சில் உத்தரவு மூலம் பங்கிடு வோட்டு முறையை ஏற்படுத்தியிருக்கிறார். பங்கிடு

வோட்டு முறை என்றால் இதுதான். அதாவது ஒரு தொகுதியில் எத்தனை ஸ்தானங்கள் இருக்கின்றனவோ அத்தனை வோட்டுகள் ஒரு வோட்டருக்கு உண்டு. ஆனால், ஒரு அபேக்ஷகருக்கு ஒரு வோட்டுதான் கொடுக்கமுடியுமே ஒழிய, ஒரே அங்கத்தினருக்கு எல்லா வோட்டையும் கொடுத்து விட முடியாது.

## சென்னை முஸ்லீம்கள் நிலை

### சர். மிஸ்ரா இஸ்மேயில் விளக்கம்

சென்னை மாகாணம் சம்பந்தப்பட்டவரையில், முஸ்லீம்கள் நிலையைப் பற்றிப் பேசுகையில், "உங்கள் மாகாண சர்க்கார் உங்கள் வகுப்பு விஷயமாக நல்ல எண்ணத்துடன் இருப்பதை நீங்கள் பரிபூர்ணமாக நம்பலாம். இன்று உங்கள் மாகாணத் தலைவராக இருப்பவர் ஒரு கீர்த்தி மிகுந்த தேச பக்தர். தன்னுடைய வகுப்பைக் காட்டிலும் தேசத்திற்குச் சேவை செய்வதில்தான் அவருக்கு அக்கரை அதிகம். முஸ்லீம்களுக்கு உயிர்போன்ற விஷயங்கள், நலன்கள் ஆகியவைகளை அவர் காப்பாற்றுவார் என்பதை நீங்கள் பூர்ணமாக நம்பலாம். அவருடைய சகபாடிகளும் உங்கள் விஷயத்தில் அதே மனப்பான்மையுடனிருக்கிறார்கள் என்பதில் சந்தேகமில்லை.

"இதே சமயத்தில் நீங்களும் சுயமாக முயற்சி செய்யாவிடில் முன்னேற வழியில்லை என்பதை மறக்கக்கூடாது. தயவு, சன்மானம் ஆகிய இரண்டிற்கும் வித்யாசமுண்டு. கூச்சல்போட்டோ அல்லது உழைப்பின் பலனாக இல்லாமலோ தயவைப் பெறுவதைக் காட்டிலும் கண்யமான முயற்சிக்குப் பரிசு பெறுவது மிக்க மதிப்பு வாய்ந்ததாகும்."

"முன்பு இருந்த மதம் இப்போது அழிந்துவிடவில்லை. அது இன்னும் இருக்கிறது. ஆனால், ராஜீய சமூகத் துறைகளில் அது இப்போது ஆதிக்கம் செலுத்துவதில்லை. தேசீயம்தான் ஆதிக்கம் வகிக்கிறது.

"துருக்கியில் இஸ்லாம் மதம் சர்க்காரின் மதமல்ல. முஸ்லீம்களும், கிறிஸ்தவர்களும் ராஜீய விஷயங்களில் டமாஸ்கஸ்ஸிலும் சரி, எகிப்திலும் சரி அருமையாக ஒத்துழைத்து வருகின்றனர். சில சமயங்களில் தேசீயத் தலைவர்கள் சுதேசி கிறிஸ்தவர்களாகவும் இருக்கிறார்கள். தேசீய ஊர்வலங்களிலே 'சிலுவையும்' 'பிறை'யும் ஒன்று கலந்து செல்கின்றன.

"இந்தியாவிலுள்ள எல்லா ஜாதியினரும் இந்த உதாரணத்தைப் பின்பற்ற வேண்டும். தாய்நாட்டின் பொதுக்ஷேமத்திற்கான விஷயங்களில் எல்லோரும் ஒத்துழைக்கவேண்டும். இதே சமயத்தில் தனியாக தங்கள் தங்கள் மதாசாரங்களைப் பின்பற்றி வரலாம். தேசீயத்திற்குப் பலவித பேதப்பட்ட ராஜீயக் கருத்துகள் விரோதியாக இருக்கலாம். ஆனால், மதம் விரோதியாக இருக்கவேண்டிய பிரமேயமே இல்லை."

## முனிசிபல் சேர்மனுக்கு அலவன்ஸ்

### சர்க்கார் உத்தரவு

முனிசிபல் சேர்மன்களுக்கு மோட்டார் வண்டி அலவன்ஸ் கொடுக்கலாம் என்று சர்க்கார் ஒருஉத்தரவு பிறப்பித்திருக்கிறது. சில சேர்மன்கள் ஏழைகளாய் இருக்கலாம் என்பதை உத்தேசித்து இவ்வாறு செய்யப்படுகிறது. போக்குவரத்து அலவன்ஸ் பெறுவதற்கு முனிசிபல் சபையின் அனுமதி அவசியம். முனிசிபல் சபைகளின் இன்ஸ்பெக்டர்களின் அனுமதியைப் பெற்றுக்கொண்டுதான் பணத்தை எடுத்துக்கொள்ள முடியும். சாதாரணமாக ஒரு லக்ஷம் ரூபாய்க்குக் குறைந்து வருமானமுள்ள நகர சபையில் 25 ரூபாயும், ஒரு லக்ஷம் ரூபாய்க்கு மேற்பட்டு ஆனல், 3 லக்ஷ ரூபாய்க்குக் குறைந்து வருமானமுள்ள நகரசபைகளில் 40 ரூபாயும், 3 லக்ஷம் ரூபாய்க்கு அதிக வருமான முள்ள நகர சபையில் 50 ரூபாயும் மோட்டார் அலவன்ஸாக பெறலாம் என்று சர்க்கார் நிர்ணயித்திருக்கிறது. ஜட்கா வைத்துக்கொண்டால் மற்ற முனிசிபாலிடிகளில் ரூ 15 அலவன்ஸ் பெறலாம் என்று விதிக்கப்பட்டிருக்கிறது. விதிக்கப்பட்டிருக்கும் தொகைகளுக்கு அதிகமாகப் போகக்கூடாது. இன்றைய தேதியிலிருந்து மேலே குறிப்பிட்ட பண விகிதம் அமுலுக்கு வரும். இதற்கு முன்னலே அமுலில் இருந்து வரும் அலவன்ஸுகளை இந்தப் புதிய சர்க்கார் உத்தரவின்படி மாற்றி அமைத்துக்கொள்ளவேண்டும். சொந்தமாகவே இந்தச் செலவை தாங்க சக்தியுள்ளவர்கள் இந்தச் சர்க்கார் உத்தரவுப்படி ஏற்படக் கூடிய லாபத்தை அடைய விரும்பமாட்டார்கள் என்று சர்க்கார் எதிர்பார்க்கிறது.

## போஸ் கட்சி—ஜவஹர் கண்டனம்

"உதிரிகள் கட்சி அமைக்கப்பட்டதை நான் முக்கியமாகக் கருதவே இல்லை. அபிப்பிராய பேத முள்ளவர்கள் சொந்தமாக ஸ்தாபனம் அமைக்கும் விஷயத்தில் நான் தாராளம் காட்டியபோதிலும், தனிக் கட்சிகள் அமைத்து காங்கிரஸ் போன்ற மகத்தான ஸ்தாபனத்தைப் பலவீனப்படுத்துவது முறையல்லவென்றும், தகுதியானதல்ல வென்றும் கருதுகிறேன். எந்த பெரிய ஸ்தாபனத்திலும் அபிப்பிராய பேதம் இருந்தே தீரும். ஆனல் இந்த அபிப்பிராய பேதத்தை தனிப்பட்ட நபர்களுடன் இணைப்பது தேசத்திற்கு தீங்கேயாகும்."

## முஸ்லீம்களுக்கு ராஜாஜியின் சேவை

### சர். உஸ்மான் பாராட்டு

நபிகள் தினத்தன்று சர். உஸ்மான், இப்பொழுது பிரதம மந்திரியாயுள்ள ராஜாஜி இஸ்லாத்தின் 2 கொள்கைகளை அமுலுக்குக் கொண்டு வந்திருப்பதாகக் கூறினர். ஒன்றை, கடன் நிவாரணச்சட்டம் மூலமும், மற்

றென்றை, மதுவிலக்குச் சட்டம் மூலமும் அமுலுக்குக் கொண்டுவந்தார். (கரகோஷம்.) " நாம் அரிய சந்தர்ப்பங்களை நழுவ விட்டு விட்டோமெனப் பிரதம மந்திரி சொன்னது வாஸ்தவம்தான். ஆனல் இது விஷயத்தில் நாம் நம்பிக்கை இழக்க வேண்டியதில்லை. அரசியலில் ஹிந்துக்களும், முஸ்லிம் களும் ஒன்றுபட்டு, நமது தாய் நாட்டின் முன்னேற்றத்திற்காக உழைக்க முடியுமெனத் திடமாகவும் நம்புகிறேன் " என்ருர்.

## பிறநாட்டு ஜவுளி வேண்டிய அவசியமில்லை

சர்க்கரை உற்பத்தி விஷயத்தில் சென்ற சில வருஷங்களாக ஏற்பட்ட முன்னேற்றத்தின் பயனுக, இந்தியாவானது வெளிநாட்டுச் சர்க்கரையை எதிர்பார்க்காமல் வாழக்கூடிய நிலைமைக்கு வந்தது. " அது போலவே ஜவுளி விஷயத்திலும் நமது லக்ஷியம் கைகூடுவது நிச்சயம். 1950-ம் வருஷத்துக்குப் பிறகு நாம் ஒரு கஜம் துணிகூட வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யவேண்டிய அவசியமிருக்காது."

—ஸர். டி. விஜயராகவாசாரியர்.

அ. இ. சர்க்கா சங்கத்தின் சார்பில் உற்பத்தியாகும் துணி மட்டுமே தான் கதர் என்பதாகுமென்று கடந்த ஜனவரி மாதம் பர்தோலியில் காரியக் கமிட்டி கூட்டத்தில் தீர்மானம் நிறைவேறியிருக்கிறது. அத்தாட்சி பெருத கதர் வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளவர்களை காங்கிரஸ் கமிட்டிகளுக்குத் தேர்ந்தெடுக்காதபடி எல்லாவிதமானதடையும் ஏற்படுத்தும்படி மாகாண காங்கிரஸ் கமிட்டியை நான் கேட்டுக்கொள்கிறேன். நமது தேச மக்களின் தியாகத்தாலும் தேச பக்தியாலும் நடந்து வரும் கதர் வர்த்தகத்திலிருந்து சில நபர்கள் பெரும் லாபம் சம்பாதிப்பதை நீங்கள் விரும்பமாட்டீர்கள். மில் ஜவுளியையும் அயல்நாட்டு ஜவுளியையும்விட்டு நாம் அதிக விலை கொடுத்து கதர் வாங்குவது என்? ஏழைகள், வேலையில்லாதவர்கள் இவர்களின் அனுகூலத்திற்காகவே கதர் வாங்குகிறோம். பிரத்யேக வியாபாரிகளின் அனுகூலத்திற்காக அல்ல:"

—பொதுக் காரியதரிசியின் உத்தரவு.

" சத்யம்தான் காங்கிரஸ் சர்க்காரின் அஸ்திவாரம், ஆகையால், நம் மனிதன், பிறர் மனிதன் என்று வித்யாசம் காட்டமுடியாது. என் பிள்ளை கூட இதற்கு விலக்கல்ல, என் பிள்ளை என்பதற்காக விட்டிருந்தால், அது பெரிய அநீதியாயிருந்திருக்கும்." —டாக்டர் கான்சாஹிப்.

# மகாத்மாவின் மணிவாக்கு

## தோல்வியே வெற்றியளிக்கும்

மகாத்மா காந்தி மே 23-ந் தேதி மாலை ராஜ்கோட் ஆர்ய சௌக்கில் ஒரு பெரிய பொதுக் கூட்டத்தில் பேசுகையில் பின்வருமாறு கூறினார்.

''என்னுடைய தோல்வியை ஒளிவு, மறைவில்லாமல் நான் ஒப்புக் கொண்டு விட்டதன்மூலம், ராஜ்கோட்டின் சரித்திரத்தில் ஒரு புதிய அத்தியாயம் ஆரம்பமாக உதவி செய்திருக்கிறேனென்று நம்புகிறேன். இதில் உங்களுடைய உதவி எனக்கு வேண்டும். தனியாக நான் ஒன்றும் செய்யமுடியாது. ஆள்பவரும், ஆளப்படுபவரும் சேர்ந்து தம் கடமையைச் செய்தால் இப்போது தோல்வியைப்போல் தோன்றுவது வெற்றியாய்விடும். இதற்கு ஜனங்களிடையே ஒற்றுமை வேண்டும்.

ராஜ்கோட் பிரச்னையில் இதுவரையில் நான் செய்திருப்பதென்ன என்பதைத் தெரிவிக்கவே இன்று இங்கு பேசுகிறேன். பிரஜா பரீஷத்தார்களிடம் மட்டும் இதை நான் சொல்ல விரும்பவில்லை. ராஜ்கோட்டிலுள்ள சகல ஜனங்களுக்கும், சகல கக்ஷியினருக்கும் முன்பாக இதைச் சொல்ல விரும்புகிறேன்.

நான் ராஜ்கோட்டுக்கு வரும்போது, ஸ்ரீ. வீரவாலாவைப் பற்றி எனக்கு நல்ல எண்ணமில்லை. தாகூர் சாஹிப் தன் வாக்குறுதியை மீறிவிட்டாரென்று நம்பினேன். நான் உபவாசம் இருக்கவேண்டுமென்று என்னுடைய அந்தராத்மா சொல்லிற்று. ஆனால், என் மனது பலஹீனமடைந்தது. இதில் தலையிடவேண்டுமென்று மறுநாளே வைஸ்ராய்க்கு எழுதினேன். அது ஒரு பாப கிருத்தியம் என்பதை இப்போது அறிகிறேன். அதனுடைய பலன்தான் சர், மாரிஸ் குவையரின் தீர்ப்பு.

பிற்பாடு அந்தத் தீர்ப்பு என்னவாயிற்றென்பதை நீங்கள் அறிவீர்கள். காலம் போகப் போக என் தவறு எனக்கு நன்றாகத் தெரிந்தது. உடனே அத்தீர்ப்பினால் கிடைத்த பலன்களை விட்டுக்கொடுத்துவிட்டேன்.

நீங்கள் என்னைப் பின்பற்ற விரும்பினால், அஹிம்ஸையின்மூலம் நமது எதிரியின் மனதை இளக வைக்க முடியும் என்ற தத்துவத்தில் நம்பிக்கை வைக்கவேண்டும். நீங்கள் சத்தியமாகவும், சுயநம்பிக்கையுடனும் நடந்துகொள்வதாயிருந்தால், ஸ்ரீ. வீரவாலாவைப் பற்றிக் கெட்ட எண்ணம் கொள்ளக்கூடாது. அப்படி கெட்ட எண்ணம் இருந்தால், உங்கள் அஹிம்ஸை பரிபூர்ணமானதென்று சொல்லமுடியாது. ஐம்பது வருஷங்களுக்கு மேலாக அஹிம்ஸையை அனுஷ்டித்து வரும் என்வார்த்தையை நம்புங்கள்,

முன்னேற்றத்திற்கும், பலத்திற்கும், ஒற்றுமைதான் அஸ்திவாரம். பிரஜாபரிஷத்காரர்கள் எல்லா ஜனங்களுடைய மனதையும் மாற்றவேண்டும். சிலர் பலஹீனத்தால் பரிஷத்தில் சேராமலிருக்கலாம் ; இருந்தாலும் எல்லோரும் நம்மைத்தான் ஆதரிக்கிறார்கள்.

ஜனங்களுடைய நல்லெண்ணத்தை சமஸ்தான அதிகாரிகளும் நம்ப வேண்டும். உலகத்திலுள்ள யார்மீதுமே வெறுப்பு இருக்கக்கூடாது ; எல்லாம் அவன் சிருஷ்டி என்ற ஐக்ய மனோபாவத்தை ஏற்படுத்தவேண்டுமென்பதே என் ஆசை.

ராஜ்கோட் பிரஜைகளும், சமஸ்தானாதிபதியும், ஒரு சமரசம் செய்துகொண்டு சந்தோஷமாய் வாழவேண்டுமென்றே நான் விரும்புகிறேன், உங்கள் சமஸ்தானத்தைப் பிறர், உதாரணமாக எடுத்துக்கொண்டு பின்பற்றுவதாயிருக்க வேண்டும். காலஞ்சென்ற லக்காஜி ராஜ் (இப்போதிருக்கும் தாகூரின் தந்தை) பலமான அஸ்திவாரம் போட்டிருக்கிறார். அதன் மீது நீங்கள் அழகான கட்டிடம் எழுப்பலாம்.

புதிய சீர்திருத்த கமிட்டி, டிசம்பர் அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு வேலை செய்யுமென்று நம்புகிறேன். என் சம்பந்தப்பட்டவரையில், என் ஆயுதங்களை யெல்லாம் கீழேவைத்துவிட்டேன். ஆகவே, நான் கேட்டுக்கொள்ளத்தான் முடியும். கமிட்டியுடன், பூர்ணமாக ஒத்துழைக்க வேண்டுமென்றும், வேண்டிய சாக்ஷியங்கள் விடும்படிக்கும் பரிஷத்தைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

போராட்டம் சம்பந்தப்பட்டவரையில், இன்னம் நான் இருட்டில்தான் தேடிக்கொண்டிருக்கிறேன். எனக்கு வழி தெரிந்தவுடன், உங்களிடம் சொல்லுகிறேன். அப்போதும் என்னுடைய ஆலோசனை உங்களுக்குத் தேவையா யிருந்தால் சொல்லுகிறேன். இல்லாவிட்டால் விலகிக்கொண்டு விடுகிறேன்.

இந்தக் கூட்டத்தில் சில முஸ்லீம்களும், பாயத்துகளும் இருப்பார்களென்று நம்புகிறேன். அவர்கள் என்னைப் பற்றி எவ்வளவோ சொன்னார்கள். ரொம்ப கடினமாகக் கூடச் சொன்னார்கள். ஆயினும், அவர்கள் என்னுடைய இந்தச் செய்தியைக் கொண்டுபோவார்களென்று நம்புகிறேன்.

எதற்காக நான் இங்கு சமாதானத்திற்கு வந்தேன்? ராஜ்கோட்டுடனும், அதை ஆள்பவர்களுடனும் எனக்கு நெருங்கிய சம்பந்தம் உண்டு. ராஜ்கோட்டில்தான் நான் வளர்ந்தேன். என்னுடைய தகப்பனார் இங்கு திவானாயிருந்திருக்கிறார். அத்துடன் காலஞ்சென்ற லக்காஜிராஜ் எனக்கு மிகவும் நெருங்கிய நண்பர். அவர் என்னை குருவாக மதித்திருந்தார்."

## நாட்டின் ஜீவன் கதர்

ஜப்பான் போன்ற பிறநாட்டிலிருந்து வரும் துணிகளைத் தரித்தவர்கள், இந்தியாவில் வாழ லாய்க்கானவர்க ளல்ல. இனமாகக் கொடுத்தால்

கூட வெளிநாட்டுத் துணியை நான் வாங்கிக்கொள்ளவே மாட்டேன். தூர திருஷ்டியுடன் பார்த்தால் இந்தியாவில் தயாரிக்கப்படுபவைகள் மலிவான தென்பது விளங்கும். இந்தியத்தொழில்கள், பட்டினி கிடக்கும் லட்சக் கணக்கான மக்களுக்கு உணவளிக்கிறது. திடீரென்று நாம் பணக்காரராகி விடமுடியாது. ஆயினும், இந்தியக் கைத்தொழில்களை ஆதரித்தால், இப்போதுள்ள வறுமையை நீக்கிவிடலாம். எவன் ஒருவன் கதர் அணிந்து ஆதரிக்கவில்லையோ அவன் இந்தியாவில் வசிக்கவே லாயக்கில்லாதவன். "தேசிய தொழில்களைக் குறிப்பாக குடிசைத் தொழில்களையும், கதரையும் ஒவ்வொருவரும் ஆதரிக்கவேண்டும். நாம் அநேக விதங்களில் அவைகளை ஆதரிக்கலாம். இறந்த மிருகத்தின் தோலை செருப்பாகத் தைத்துப்போட்டுக்கொள்வதில் ஒரு கெடுதியுமில்லை. அந்தத்தோல் பசுவின் தோலாக இருந்தால்தான் என்ன? வட பீஹாரில் கைத் தொழிலுக்கு வேண்டிய சாமக்ரிகள் ஏராளமாகவிருக்கின்றன. நாம் அசட்டை செய்யும் இன்னும் ஒரு பொருள் இருக்கிறது. அதுதான் பதினி. பதினியிலிருந்து கருப்பட்டியை உண்டாக்கலாம். பதினியை அப்படியே சாப்பிடுவதும் நல்லதுதான். இதனுல் நான் லாகிரி வஸ்துக்களை நீங்கள்உபயோகிக்கவேண்டுமென்று சொல்வதாக நினைக்காதீர்கள். லாகிரி வஸ்துக்களை பதினியிலிருந்து தான் செய்யலாமென் றில்லை. இன்னும் எத்தனை எத்தனையோ பொருள்களும்தான் லாகிரி வஸ்துவை தயார் செய்ய உபயோகமாக இருக்கின்றன.

## "சத்தியத்தை விற்கமாட்டேன்"

---

இந்தியாவின் விடுதலைக்காகக் கூட நான் சத்தியத்தை விற்கமாட்டேனென்று அடிக்கடி சொல்லியிருக்கிறேன். அப்படியிருக்க, முஸ்லீம்களின் நட்பை பெறுவதற்காக அப்படிச் செய்து விடுவேனே? கிலாபத் பிரச்னையில் நான் நடந்துகொண்டது தவறென்றும், யூதர் பிரச்னையும் அப்படித் தானென்றும் அவர் நினைக்கிறுர். இவ்வளவு வருஷங்களுக்குப் பிறகும் கூட, கிலாபத் இயக்கத்தில் நான் கலந்து கொண்டதைப்பற்றி எனக்கு வருத்தம் தோன்றவே இல்லை. நான் பிடிவாதமாகச் சொல்லிக்கொண்டேயிருப்பதால் மட்டும், என் கக்ஷி சரியென்று ருசுவாய் விடாதென்பதை நான் அறிவேன். 1919-20-ல் நான் செய்ததைப் பற்றி இன்று நான் என்ன கருதுகிறேனென்பதை எல்லோரும் அறிய வேண்டுமென்பதே என் கவலை.

நான் இந்தக் கட்டுரையை எழுதியிருப்பதால், "யூதர் எல்லைப்புறப்" பத்திரிகையின் ஆசிரியருக்கோ, என்னுடைய பல யூத நண்பர்களுக்கோ ஒரு திருப்தியும் ஏற்படப் போவதில்லை யென்பது எனக்குத் தெரிந்துதான் இருக்கிறது. இருந்தாலும் ஜெர்மனியில் யூதர் கொடுமைப்படுத்தப்படுவது, எப்படியாவது நின்றுவிட வேண்டுமென்றும், பாலஸ்தீன பிரச்னை எல்லோருக்கும் திருப்தி அளிக்கக்கூடிய முறையில் தீர்க்கப்பட்டு விடவேண்டுமென்றும், மனப்பூர்வமாக விரும்புகிறேன்."

ஸ்ரீ

# கானல் நீர்

அல்லது

# கபட உலகம்

“உலகத்தின் தன்மையை அறிந்துகொள் மடநெஞ்சே! ஆதியாய் அனுதியாய் அங்கிங்கெனுதபடி எங்கும் பிரகாசமாய், ஜ்யோதிச்சுடராய் எழுந்தருளி இருக்கும் ஸ்ரீ பகவானைப் பணிந்து உன் குறைகளை முறையிடுவாய் நெஞ்சே! அவனன்றி உன்னை ஆதரித்திடும் வள்ளல் வேறு யாருமில்லை. எத்தகைய துன்பத்தையும் தீர்த்து ரக்ஷிக்கும் கர்த்தன் அவன் ஒருவன்தான். அதை நம்பு!” என்று பரம பக்தன் ஒருவன் தன்னைத்தான் பார்த்துச் சொல்லிக் கொண்டான் — என்ற வாக்கியங்களை வேதாந்தப் பழம்போல் விளங்கிய ஓர் பெரிய அம்மாள் அவளைச் சுற்றிலும் உட்கார்ந் திருக்கும் மற்ற ஸ்திரீகளைப் பார்த்துச் சொன்னுள்.

அதை அந்தப் பெண்டுகள் தம் மெய்ம்மறந்த ஆனந்தத்துடன் ஸ்வராஸ்யமாகக் கேட்டுக்கொண்டிருந்தார்கள். அந்தக் கிழவி, மீண்டும் தனது கையிலுள்ள புத்தகத்தைப் பார்த்துப் படிக்க ஆரம்பித்தாள்.

“கடவுளே! உன்னுடைய சோதனை அத்தனையும் என்னுடைய நன்மைக்கென்றே தீரமாக நம்பி அனவரதமும் உன் சரணகமலங் களில் பணிந்து போற்றுகின்றேன். என் துயர் தீர்த்து என்னையாட் கொண்டருள்” என்று குசேலர் மனமுருகிப் பிரார்த்தனை செய் தார் என்ற கட்டத்தை தங்கம்மாள் படிக்கும்போது மணி, ‘டாங்! டாங்!!’ என்று நான்கு அடித்தது.

இந்த சத்காலக்ஷேபம் கேட்டுக்கொண்டு உட்கார்ந்திருந்த பெண்மணிகள், "அடாடா! இதற்குள்ளா நான்கு அடித்து விட்டது! இன்று கதை ஸ்வாரஸ்யத்தில் பொழுது போவதே தெரியவில்லையே? தங்கம்மா! இன்று இதோடு நிறுத்திக்கொள்ளுங்கள். பள்ளிக்கூடத்திலிருந்து குழந்தைகள் வரும் நேரமாகிவிட்டது. வீட்டிலோ தலைக்குமேல் வேலை கிடக்கின்றது. நாளைக்கு வழக்கம் போல சந்திப்போம்" என்று சொல்லிக்கொண்டே எழுந்தார்கள். அவர்களில் ஒருத்தி, "ஏன் தங்கம்மா! நாளைக்குச் சுதாமர் சரித்திரம் முடிந்து வேறு கதை ஆரம்பிப்பீர்களா?"

**தங்க** :—ஆம். இதை முடித்துவிட்டு நந்தனார் சரித்திரம் ஆரம்பிக்கலாம் என்றிருக்கிறேன். கடவுளின் கிருபை எப்படியோ?

அதே சமயம் தங்கம்மாளின் புதல்வனும் அவனது சகபாடிகள் நால்வருமாக அட்டகாசமாகப் பேசிக்கொண்டும், விஸில் அடித்துக்கொண்டும், ஒய்யார நடை நடந்தவாறு நடைப்பக்கம் வந்தார்கள். வந்தவர்களில் ஒருவன் உள்ளே யிருக்கும் பெண்களின் கூட்டத்தைப் பார்த்துவிட்டு முகத்தைச் சுளித்துக்கொண்டு வெறுப்புடன், "ச் ச். டாம் நான்ஸென்ஸ்! கேள்விமுறையில்லையா? ஏண்டா ரத்னம்! இதென்ன உன் வீடா அல்லது சந்தையா அல்லது கொத்தவால் சாவடியா என்னடா இது? தேர் கடை திரு நாள் கடைபோல் இதென்ன கூட்டம்? வீட்டிலென்ன விசேஷம்? இதற்கு முன்னே உன்னைத் தேடிக்கொண்டு வந்தபோதும் இதே மாதிரிதான் இருந்தது. டேயப்பா! மொட்டையும் கட்டையுமாக எத்தனை அவதாரங்கள்!" என்றான்.

**மற்றொருவன்** :—ஹூம். இவ்வளவுதானா உனக்குத் தெரிந்த அழகு? அதோ அந்தக் கூட்டத்தின் மத்தியிலே ஒரு பண்டார சைவப்பழம்—வேதாந்த பொக்கிஷம், ஆஸ்திகதர்மக்கோட்டை— நிக்கிறது பாரடா. அதுதான் நம்ம ரத்னத்தின் தாயார். அந்தம்மா வாயிலேந்து தினம் ஒரு சாமி கதை மழையா பொழியறதாம். அதையெல்லாம் அப்படியே குடிச்சுடரத்துக்குத்தான் இந்தக் காக்கா யெல்லாம் கூடியிருக்கு. இது தெரியலையாடா உனக்கு?" என்று சொல்லிக்கொண்டே கைகொட்டிச் சிரித்தான்.

உள்ளே யிருக்கும் கூட்டத்தைப் பார்த்ததும், தன் சினேகிதர்கள் சொல்லியதைக் கேட்டதும் ரத்னத்திற்கு ஒருபுறம் தாங்கவியலாத அவமானமும், மற்றொருபுறம் கட்டுக்கடங்கா ஆத்திரமும் பொங்கிவிட்டன. அதற்குள் வேறொருவன், "இப்படிப்பட்ட மூதேவிகளெல்லாம் வீட்டிலே யிருந்தா வீடு விடியறது ஏதுடா? எங்க வீட்டிலேகூட என் பாட்டி ஒரு கிழவி போது விடிஞ்சா இந்தப் பண்டிகை, அந்தப் பண்டிகையென்று என் பிராணனை யெடுப்பாள். அந்தப் பூஜைகளைச் சாக்கிட்டுக் கொழுக்கட்டை, சுண்டல், இட்டிலி, எழவு, பாத்தாளி இவைகளை யெல்லாம் செய்து குழந்தைகளுக்கு ரோகத்தைத் தாம்பூலம்வைத்து அழைப்பதுமல்லாமல் வைத்தியர்களுக்குப் பணத்தைக் கொட்டும்படி புண்ணியவதி செய்துவிடுவாள். அவளை வீட்டைவிட்டுத் தொலைத்தபிறகுதான் என் வீடு இப்போது நிம்மதியாக விருக்கிறது. இந்த ந்யூஸன்ஸுக் கெல்லாம் எடமே குடுக்கக் கூடாதுப்பா ரத்னம்!" என்று உத்தமமான உபதேசம் செய்தான். இந்த ஹிதோபதேசம் ரத்னத்தின் கோபாக்னியைத் தூண்டிவிட்டது போலாயிற்று.

அதே சமயம் உள்ளிருந்த பெண்மணிக ளெல்லோரும் ஒவ்வொருவராக வீடு திரும்ப வெளியே வரலானார்கள். அவர்களைப் பார்த்து, இந்த இறுமாப்புப் பிடித்த கூட்டத்தினர் ஏளனமாக நகைத்து குசமச வென்று பேசலானார்கள். ஆவேசத்துடன் உள்ளே சென்ற ரத்தினசாமி தங்கம்மாளின் கையிலிருந்த புத்தகத்தை வெடுக்கென்று பிடுங்கி வீசியெறிந்துவிட்டு, புஸ்தகம் வைத்துப் படிக்கும் பீடத்தைக் காலால் எட்டி உதைத்துத் தள்ளிவிட்டு, தாயாரைக் கடுமையானப் பார்வையில் பார்த்து, "அம்மா! உனக்குக் கொஞ்சம்கூட புத்தியில்லே. ஒருநாளா; இரண்டு நாளா? எத்தனை நாளைக்கு உனக்கு சொல்றது? எனக்குப் பிடிக்காத காரியத்தைச் செய்ய வேண்டாமென்றால், அதை அடமாகச் செய்வதுதான் உனக்கு விரதமோ? இதென்ன அறிவாளிகள் வாழும் வீடு என்று எண்ணினையா? அல்லது சோம்பேறி மடமென்று நினைத்தாயா?" என்று இவன் கர்ஜிப்பதைக் கேட்ட அப்பெண்மணிகள் அசைவற்றுப் பிரமித்து நின்றுவிட்டார்கள். ரத்

தினத்தின் சகாக்கள் "பேஷ்! பேஷ்!" என்று சந்தோஷ ஆரவாரம் செய்தார்கள்.

தங்கம்மாள் தன்னுடைய இயற்கையான சாந்தத்தையும் பொறுமையையும் இழக்காமல் குளிர்ந்த முகத்துடன், "அப்பா! ரத்தினம்!" என்று நயமாகக் கூப்பிட்டு, ஏதோ சொல்ல ஆரம்பித்தாள். ஆனால், 'பேரிடிக்கு முன்பு பல்லியின் சப்தம் எம்மாத்திரம்' என்பது போல் ரத்தினத்தின் த்வனிக்கு முன்பு தங்கம்மாவின் மெல்லிய குரல் அமுங்கிப் போய்விட்டது. தாயார் கூப்பிடுவதையும் அவன் லக்ஷியம் செய்யாமல் அந்தப் பெண்மணிகளைப் பார்த்து, "ஏ மூதேவிகளே! சோம்பேறிக் கூட்டங்களே! இனிமேல் இங்கு காலை எடுத்துவைத்தால் தெரியும் சேதி. இது உங்கள் அட்டகாஸக் கூத்தடிக்க விடுதியல்ல. சோம்பேறி மடமல்ல. ஜாக்கிரதை! உங்களுக்குத் தகுந்த இடம் பக்கத்துத் தெருவில் பாழும் சத்திரம் இருக்கிறதே அதுதான். அங்கு சென்று கட்டி அழுங்கள்" என்று கூரிய பாணங்கள் விடுவதுபோல வாய் கூசாமல் இறைந்தான். இதைக்கேட்ட அவன் சகாக்கள், "சபாஷ்! சபாஷ்! வெல் ஸெட். வெல் ஸெட். ரத்னம்! சபாஷ்" என்று கோஷித்தார்கள்.

இதைக் கேட்டதும் அப் பெண்மணிகளின் உள்ளம் ஆத்திரத்தினாலும், அவமானத்தினாலும், துக்கத்தினாலும் துடித்தது. கண்களில் நீர் மளமளவென்று முட்டிவிட்டது. தங்கம்மாளுக்கோ இவனது செய்கை தாங்கவியலாத விசனத்தைக் கிளப்பிவிட்டது. "அப்பா, ரத்தினம்! பிறர் மனம் நோகச் செய்வது தர்மமல்ல. 'ஏழை அழுத கண்ணீர் கூரியவாளையொக்கும்' என்பதை மறந்துவிட்டாயா? சத் விஷயத்தில் பொழுது போக்க வந்த இப் பெண்மணிகளை நீ அந்த அஸத்துக்களின் சகவாஸத்தினால் அவமதிப்பது சற்றும் தகாது" என்று சொல்கையில், ரத்தினம் ஆவேசத்துடன், "ஆமாம். சத்து விஷயம். சொத்தை விஷயம், அப்படியே கரைத்துக்குடிக்கிறத்துக்குத் தேவலோகத்திலேருந்து குதிச்சிருக்கற பிண்டங்களில்லே இவால்லாம்? பேசாமே உள்ளே போம்மா" என்று கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு பின் கட்டுக்குப் போனான்.

இச் செய்கையும், சொல்லும், அப் பெண்மணிகளுக்குக் குடல் நடுக்கத்தையும், கடும் கோபத்தையும் உண்டாக்கிவிட்டன. அவர்களில் ஒரு பெரியம்மாள் தைரியத்துடன் ரத்தினத்தை நோக்கி, “அட பாவி மகனே! பெத்த தாயாரின் மனதை பதறச் செய்யும் மகா பாபிகள் நீங்களும், உங்களைப் போன்ற இன்னும் சிலரும் இந்த உலகத்தில் இருப்பதால்தான் மகா புனிதமான இப் பாரத நாட்டிலும் பூகம்பமும், வெள்ளமும், பஞ்சமும் வந்து பலவிடங்கள் பாழாகின்றன” என்று கூறி முடிப்பதற்குள், அடங்கா ஆத்திரத்துடன் அருகிலிருந்த ஒரு நாற்காலியைத் தூக்கி அந்தம்மாள்மீது எறிய எத்தனித்தான். அந்தம்மாள் சற்றும் தயங்காமல், “தூ! விஷப்பதரே! இன்று என் மண்டையை நீ உடைத்தால், நாளை உன் மண்டையை கடவுள் உடைத்து உன் அடாத செய்கையின் பலனை நீ அறியும்படியாகச் செய்வார்” என்று சொல்லிக்கொண்டே அவ்விடத்தை விட்டு மறுநிமிடமே மறைந்தாள்.

ரத்னம் ஆத்திரத்துடன் வீசிய நாற்காலி, எதிர்பாராவிதமாக அந்தம்மாள் நகர்ந்து ஓடிவிட்டதால் தூரவிருந்த தன் ஆப்த நண்பர்கள் மீது வெகு வேகத்துடன் சென்று அன்பாகத் தழுவியது. அடிபட்ட சிநேகிதன், “ஐயையோ! என்னடா பாவி! என்காலை ஒடித்துவிட்டாயே!” என்று அலறினன். ரத்னம் ஓடிவந்து “எக்ஸ்க்யூஸ் மீ பிரதர்! ஐ ஆம் வெரி ஸார்ரி” என்று வேண்டிக் கொண்டான். அதற்குள் ஒருவன், “அப்ப! மழைபெய்து ஓய்ந்தது போலவிருக்கிறது” என்றுன். ரத்னம் அவர்களை உள்ளே அழைத்துச் செல்ல, ஹாலில் போடப்பட்டிருந்த நாற்காலிகளில் அவர்கள் அட்டகாஸமாக அமர்ந்தார்கள்.

ரத்னம் ஒரு பித்தானை அழுத்திய உடனே, நவ நாகரிக சிங்காரியாய் விளங்கும் ஓர் சுந்தரி பெரிதாக நகைத்துக்கொண்டே தட்டுகளில் பலகாரங்களுடன் ஒய்யாரமாக வந்து மேஜைமீது தட்டுகளை வைத்துவிட்டு, “பேஷ்! இம்மாதிரி என்றுவது ஒருநாள் நடக்காதா என்று நான் இரவு பகல் எதிர்பார்த்துக்கொண்டிருந்தேன். இன்றுதான் பூர்த்தியாயிற்று. வீட்டில் ஒரு நிமிடமாவது நிம்மதியுண்டா! என்சிநேகிதைகள் தாராளமாய்வருவதற்கும் சுதந்

தரமாய்ப் பேசுவதற்கும் ஆசையுண்டா ? எப்போது பார்த்தாலும் இதே காலக்ஷேபத்தொல்லை தான். சளசளவென்று சந்தைக் கடை இறைச்சல் தான். அப்பா ! இனிமேல் ஒரு சனியும் வராது என்று நினைக்கிறேன் " என்று ஏளனமாகக் கூறினாள்.

இதைக்கேட்ட அக்கூட்டத்தினரில் ஒருவன், மிகவும் கேவல மான தொனியில் பேசத் தொடங்கி, " ஆமாம். இந்த அல்பங்களுக் கெல்லாம் மானம் வேறு ரோஷம் வேறு. இந்த அவமானத்தை எல் லாம் காத்தில் பறக்கவிட்டு விட்டு நாளையே கூட்டங் கூடி விட் டால் நீங்கள் என்ன செய்ய முடியும் ? இந்தக் கிழப்பீடை வீட்டி லிருக்கும் வரையில் நியூஸன்ஸ்தான் " என்றான்.

**ரத்னம்:**—(கைகளைப் பிசைந்துகொண்டு) ஆமாம் ப்ரதர்! நானும் இதைப்பற்றி யோசித்துக் கலங்கிக் கொண்டுதான் இருக்கிறேன். 'என்னவிருந்தாலும் பெற்றதாயாயிற்றே !' என்ற ஒரே காரணத் திற்காகப் பார்க்கிறேன்.

**ஒருவன் :**—போடா ! பயித்தியக்காரா ! பெத்த தாயா ராம், தாயார் ! நீ பார்ப்பதுபோல் அந்தக் கிழமும் பெத்த மகனா யிற்றே என்று பார்க்கவேண்டாமா ? பெற்றமகன் மனங்கோணாது நடக்கும் தாயார்தான் உத்தமியானதாயாராவாள். இது தெரியாதா?

**சுந்தரி :**—ஆமாம் ! பெத்த தாயார் என்பது உங்களுக்குமட்டும் தான் ரிஜிஸ்தர் செய்திருக்கிறதா என்ன ? என்—உங்கள் தமய னுக்கு அந்தப் பதம் விதிக்குவிலக்காகிவிட்டதா? அல்லது உங்கள் தமக்கைக்குத்தான் அதுபாத்யமில்லையா ? சதா சர்வதா இங்கு இருந்துகொண்டு நம் ப்ராணனைத்தான் வாங்கவேண்டுமென்று எங்கே சொல்லியிருக்கு ?

**வேறொருவன்:**—பேஷ்! ஸிஸ்டர்! அப்படிகேளுங்கள், உன்னை ஒத்தனைதான் அந்த கிழம்பெத்ததா, அவர்களைப் பெறவில்லையா ? அங்கே போகட்டும்.

**சுந்:**—ஐயோ ! பாவம். நான் இத்தனை படிப்பும் படித்து விட்டு நாகரிக நங்கையாக விருந்தும் இந்த கிழத்தினிடம் அடிக்கு அடிப்பட்டு ஆக்கினைக்குட்பட்டுப் பயந்து சாகிறேன் : அந்தமாதிரி

அந்த நாட்டுப்பெண் சாகமாட்டாளா பாவம்! கரண்டியைக் காய்ச்சி சூடு போட்டுவிடுவாள். எல்லாந் தெரிந்துதான் இங்கேயே அட்டையைபோல் கிடக்கின்றது. கிடக்கத்தான் கிடக்கிறதே! வாயை அடைத்துக்கொண்டு கிடக்கக்கூடாதா? சதா ஏதாவது நொணநொணவென்று நச்சரிப்பதும் குற்றங் கண்டுபிடிப்பதும் குறைகூறுவதும் சோம்பேறிக் கூட்டத்துடன்கும்மாளமடிப்பதும் அப்பப்பா! சகிக்கமுடியாத இம்சையாக விருக்கிறது. என் பிறந்த வீட்டுக்காரர்கள் காலேவைக்க ஆசையுண்டா! அவர்களிடமிருந்து கடிதம் வந்தால்கூட இந்தக் கிழத்திற்கு வயிற்றெரிச்சல் சகிப்ப தில்லே. ஆட்டமாடக் கிளம்பிவிடுகிறது. இந்த உபத்திரவத்திற் காகவே அவர்களே நான் வரவழைப்பதே இல்லே.

**மற்றொருவன்** :—என்டா ரத்தினம்! கேட்டயா! உனக்கு வெட்கமாயில்லே. ஐயோ பாவம்! ஸிஸ்டருக்கு மட்டும் தன் மனிதர்கள் வரவேண்டுமென்று இருக்காதா? அதை நீ கவனிக்க வேண்டாமா?

**ரத்** :—பிரதர்! இந்த விஷயம் எல்லாம் எனக்குத் தெரியாதே. அம்மாதிரி அவள் செய்வாள் என்றது தெரிந்திருந்தால், நான் தகுந்த படி அப்பவே செய்திருப்பேன். சுந்தரி! இதை எல்லாம் ஏன் முன்பே என்னிடம் சொல்லவில்லே?

**சுந்த** :—ஆமாம்! இதை எல்லாம் சொல்லித் தாயாருக்கும் பிள்ளேக்கும் சண்டை மூட்டிவைத்தாள் என்கிற பட்டத்தை நான் பெறவேண்டுமோ? என் மனிதர்கள் வந்து இங்கு இவளிடம் அவ மரியாதை அடைவதைவிட அவர்கள் வராதிருப்பதே நலம். என் தாயார் வந்தால், எனக்கு ஒத்தாசையாயிருக்கும் என்கிறதை அறிந்துதான் அப்படிக்கூடாது; நானே கஷ்டப்பட்டுச் சாகட்டும் என்று இம்மாதிரி செய்கிருள். மாதம் 15 ரூபாய் சமையல்கார னுக்குக் கொடுக்கிறேன். என் தாயாரிருந்தால் இந்தப் பணம் மிச்ச மாகு மல்லவா!

**வேரொருவன்** :—அப்படியானல் அந்த கிழம் சமயல் கூடச் செய்வதில்லேயா! சாப்பாட்டுக்கு மட்டுந்தான் ஆஜரா!

சுந்த:—போதுமே வயித்தெரிச்சல். காலையில் எழுந்தால் சாப் பாட்டுக்கு வரும் வரையில் பூஜை, ஜபம், தபம், பஜனை, பாட்டு, கூத்து, கோயில் குளம்...மிச்சத்திற்கு என்னையும் என் குழந்தை களையும் அதிகாரம் செய்து அட்டகாஸம் செய்வது. இத்தனை வைபவத்துக்குள் மணி 12 ஆகிவிடுகிறது. எனக்கோ, பசி காதை அடைக்கிறது. எத்தனைதரம் சாப்பாட்டுக்குக் கூப்பிடுவது? ஒவ் வொரு நாளைக்கு எனக்குப் பசி மிகுதியால் மயக்கங்கூட போட்டு விடுகிறது. என் தலையெழுத்து என்ன செய்வது?

இந்த வார்த்தைகள் ரத்தினத்தின் மனத்தில் சுறுக்கென தைத்தன. "சுந்தரீ! இப்படி எல்லாமா நடக்கின்றது? இருக் கட்டும். இன்று முதல் சமையல்காரனை அனுப்பிவிடு. அந்தப் பண் டாரக் கிழமே வேலை செய்யட்டும். அப்படி தகராறு செய்தால், வீட்டைவிட்டுப் போகட்டும். இன்றே உன் தாயாரை வரும்படி கடித மெழுது. இனிமேல் வாலாட்டுவதை நான் பார்த்துக்கொள் கிறேன். எங்கே அந்த கிழம்?" என்று கூறிக்கொண்டே ஆவே சத்துடன் உள்ளே ஓடினான்.

"அடாடாடா! இந்தப் புத்தி வருவதற்கு இத்தனை நாளா யிற்று? பேஷ்! பேஷ்!" என்று அந்த கூட்டம் பெருத்த ஆரவாரம் செய்தது. சுந்தரியும் களக்களக் கென்று நகைத்தாள்.

## 2

தலைகால் தெரியாத ஆத்திரத்துடன் ரத்தினம் தங்கம்மாளை இழுத் துக்கொண்டு போய் தள்ளியதும் தங்கம்மாளின் மனம் பெரும் அதிர்ச்சியினால் நடுங்கியது. தன் மகனால் தனக்கும், உத் தமமான பல பெண்மணிகளுக்கும் தான் கனவிலும் எதிர் பாராதபடி ஏற்பட்ட இந்த அவமானம் அவளைப் பதறச் செய்தது. இது ஏதோ பெரிய தெய்வக் குற்றமாகத் தோன்றியதேயன்றி, சாதாரணமாகத் தோன்றவில்லை. மேன்மையான குடும்பத்தில்

பிறந்து செல்வாக்குடன் வளர்ந்த தங்கம்மாள் கடவுளிடத்தில் பக்தியும், பெரியோர்களிடத்தில் மதிப்பும், சத் விஷயங்களில் அபார உத்ஸாகமும், சத் ஸகவாஸமும் பரிபூர்ணமாகக் கொண்டவளாதலால் தன் மகனுல் நடந்த இக் கேவலமான சம்பவம் அவள் இதயத்தைப் புண்படுத்தியதில் அதிசயம் யாதும் இல்லை.

"அந்தோ! மறுபடியும் அந்த பெண்மணிகளின் முகத்தை நான் எப்படிப் பார்ப்பது? பரிசுத்தமான அவர்களின் மனம் நோகுமானுல் இக் குடும்பமே நொந்துபோகுமல்லவா? உத்தமமானவர்களின் ஒரு சொட்டுக் கண்ணீர் ஒரு செந் தணலுக்குச் சமமானதல்லவா? ஐயோ! சிறு பிராயம் முதல் எத்தனையோ நன்னீதிகளையும், நன்மார்க்கங்களையும் உபதேசித்து அரும்பாடுபட்டு நான் வளர்த்ததெல்லாம், அவனது கெட்ட சகவாஸத்தினுல் சமுத்திரத்தில் கரைத்த சர்க்கரைபோலாய்விட்டதே. ஹா! கடவுளே! அவனது நிலைமை இவ்வளவு கேவலமாகிவிட்டதென்று இந்த நிமிஷம்வரை தெரியாதுபோய்விட்டதே. வ்யாதி முற்றியபிறகு சுலபமாக சொஸ்தப்படுத்துவது எவ்வளவு கடினமோ, அவ்வளவு கஷ்டம் இனி இவன் புத்தியை நல்வழிக்குத்திருப்புவது என்ற கதிக்கல்லவா வந்துவிட்டது!" என்று தனக்குள் பலவாருகச் சிந்தித்தவண்ணம் சற்றுநேரம் விழுந்த இடத்திலேயே இடிந்துபோய் கிடந்தாள்.

கொஞ்சநேரம் கழித்து தன் மனதை சமாதானப்படுத்திக் கொண்டு முன்கூடத்திற்கு வரத்தொடங்கினள். பின்கட்டுக் கூடத்திற்கு வரும்போதே முன்பக்கத்துஹாலில் ரத்னம் தன் சகபாடிகளுடன் அட்டகாஸமாய் உட்கார்ந்து அரட்டையடிப்பதும், தன்மருமகளும் ஸ்திரீகளுக்குள்ள இயற்கைக் குணத்தை விலக்கிவிட்டு அவர்களுடன் கலந்துகொண்டு பேசுவதும் தங்கம்மாளை இன்னும் திடுக்கிடச்செய்தன. அவர்களின் வாயினின்று வரும் விஷயங்கள் யாவும் கூரிய பாணங்கள்போன்று தங்கம்மாளின் இதயத்தைத்துளைத்தன. "என்ன அநியாயம்! என்ன அக்கிரமம்! இப்படி புத்தியை பேதிக்கச்செய்வதற்கென்றே ஓர்கூட்டம் உலகத்தில் இருக்கின்றதா?" என்று வியந்தபடியே அங்குள்ள மறைவானவிடத்தில் நின்றபடியே அவர்கள் பேசிய யாவற்றையும் கவ

னித்தாள். தன்னுடைய மருமகளும் இவ்வளவு கேவலமான ஸ்தி திக்கு வந்திருக்கும் வயிற்றெரிச்சலை அவளால் சகிக்கவேமுடிய வில்லை.

"சோதாஸ்தானத்திற்கு முதல்நம்பர் பெற்றிருக்கும் இக்கூட் டத்துடன் தாராளமாகப் பேசும் தைரியம் படைத்த இவள், மாமி யார்மீது கொடுமைசொல்லுவதும், நிந்திப்பதும் ஒரு வியப்பா ? என் காலவிதி" என்று வருந்திக் கண்ணீர்வடித்தபடியே அங்கு நிற்க மனமின்றித் தவித்தாள்.

எதிரில் சென்று தன் மகனையும், மருமகளையும் அடக்கித் திருத் தலாமா என்றும் எண்ணினாள். அந்த அறிவுகெட்ட கூட்டத்தின் முன்பு தான் சென்றால் அவர்களால் அதிகமான அவமானம்தான் உண்டாகும் என்று தோன்றியதால் நேரே பூஜா அறைக்குச் சென்று கடவுளை தோத்தரித்துக் கண்ணீர்விட்டு "ஏ ஜகத்ரக்ஷகா ! என்மகனும், மருமகளும், இத்தகைய கேவலமான புத்தியுடன் பாழாவதைக்கண்டு சகிக்கவில்லையே ! இவர்கள் நிலைமை இம்மாதிரி யாவதற்கு நான் செய்தபாவந்தான் காரணமா ! அன்றி அவர்கள் செய்த கர்மந்தான் முன்வந்ததா !"

என்று மனமுருகி வேண்டும்பொழுதுதான் நாம், முன்னதிகா ரத்தின் இறுதியில் கூறியபடி ரத்னம் ஆவேசத்துடன் தங்கம் மாளைத் தேடிக்கொண்டு வந்தான். பின்கட்டுக் கூடத்திலும் சம யல் கட்டிலும் அவளைக்காணாமையினால் "மூதேவி ! சாமி ! சாமி !! என்று அடித்துக்கொள்ளும் சாமி அறையில் இருக்கும்" என்று முணுமுணுத்துக்கொண்டு அவ்வறையில் புகும்சமயந்தான் தங்கம் மாள் மேற்குறித்தவாறு பிரார்த்தனை செய்ததைக் கேட்டு, "ஆஹ் ஹா ! செய்வதை எல்லாம் பூனைபோல்செய்துவிட்டு சாமியை வேண்டி வேஷம் போடுவது வேறு நாட்டியமா ?

உன்பாவந்தான் என்னையாட்டுமேயன்றி நான் பாவம் செய்த வனேயல்ல. வா வெளியே ! உம்." என்று அன்னையென்ற அன்போ, மதிப்போ, மரியாதையோ சிறிதுமில்லாமல் தங்கம்மா ளின் கையைத் தரதரவென்று பிடித்து இழுத்துக்கொண்டு அவ் வறையைவிட்டு வெளியே வந்தான். "என் மனைவியை நீ ஓர் உயர்ந்த

பொருளாக மதித்தாயா அல்லது ஒரு புழுவென எண்ணினையா? வேளாவேளைக்கு உண்பதும், வீண் கூட்டம் கூட்டிக்கொண்டு வம் படிப்பதும், என் மனைவியை அட்டகாஸத்துடன் அதிகாரம் செய் வதுந்தான் உன் தொழிலா? இனி இப்பருப்பு இங்கு வேகாது. உன்னுடைய இந்த துர்க்குணம் தெரிந்துதான் நீ பெற்ற மகனும் மகளுமே உன்னை வைத்துப் படைக்க மறுத்துவிட்டார்களென்பது இப்போதுதான் தெரிகிறது....

என்று கூறி முடிப்பதற்குள் தங்கம்மாள் தன் இயற்கையான பொறுமையை இழக்காமல் "அப்பா ரத்னம்! பதருதே. கண்ணை மூடிக்கொண்டு வார்த்தைகளைக் கொட்டியளந்து சிதருதே. கலகப் போதை உன் மூளையைக் கலக்கியிருப்பதால்தான் நீ இவ்வாறு தலை கால் தெரியாமல் ஆடுகின்றாய். நேற்று வந்த சிநேகிதர்களும், அதற்கு முன் தினம் வாய்த்த மனைவியும் உனக்குப் பிரதானமாகி விட்டதால், உன்னை அரும்பாடுபட்டுப் பெற்று வளர்த்த தாயார் உனக்குக் கேவலம் அலக்ஷியப் புழுவெனத் தோன்றுகிறாள்; தர்ம மில்லை; நியாயமில்லை. கடவுள் காட்டிய நேர் வழியில் செல்லாது கோண வழியில் சென்று குல நாசமடையாதே" என்று நிதான மாகக் கூறும்போது கூடத்திலிருந்த கூட்டம் கடகடவென்று இடி இடிப்பதுபோல சிரித்தது. இதைக் கேட்ட தங்கம்மாள் உள்ளம் கொதிக்க அவர்களை ஒரு முழி முழித்துப் பார்த்தாள். "அப்பா! தர்மதேவதைகளே! உங்களால் அழிந்து பாழான குடும்பங்கள் எத்தனையோ? அழியப்போகும் குடும்பங்கள் எத்தனையோ? என் ரத்தினத்தின் தலையிலும் கை வைக்க வந்துவிட்டீர்களா?"...

சுந்தரியை நோக்கி, "அம்மா! புண்ணியவதி! பெண்களின் புகழைக் கெடுக்க முற்படாதே, எழுந்து உள்ளேபோ. 'அடாது செய்பவர் படாது படுவர்' என்பது எல்லோருக்கும் ஞாபகமிருக் கட்டும்." என்று முடிப்பதற்குள்ளேயே, அச்சோதாக் கூட்டத் தினர் "ஏய் பண்டாரக்கிழமே! பித்தம் தலைக் கேறிவிட்டதோ? எலுமிச்சம்பழமும் குளிர்ந்த ஜலமும் தேவையா இப்போது?" என்று கூறிக் கொண்டே தங்கம்மாளின் அருகில் வந்தார்கள்.

அதற்குள் சுந்தரி ஏளனமாக நகைத்துக் கொண்டே "பிரதர்! எலுமிச்சங்காய் இருந்தாலும் ஊறுகாயோ பானகமோ செய்து

சாப்பிட்டு சந்தோஷப்படலாம். பைத்தியக்கார ஆஸ்பத்திரியிருக்கிறதே அந்த இடத்திற்கு அனுப்புவதே சரியான சிகிச்சை" என்று சொல்லுகையில், ரத்னம் உள்பட அந்தக் கூட்டத்தினர் கை கொட்டிச் சிரிக்கலாயினர். தங்கம்மாளின் உள்ளம் எப்படித்தான் கொதித்திருக்கும்?

அச்சமயம் அகஸ்மாத்தாக அங்கு வந்த சுந்தரியின் தகப்பனுர் இந்த அக்கிரமங்களைக் கவனித்துக் கொண்டே நின்ருர். சுந்தரியின் வாயிலிருந்து வந்த செந்தணல் போன்ற வார்த்தையைக் கேட்டு ஆத்திரத்துடன், "சுந்தரி! சீ. உள்ளே போ. இத்தனை நாள் என் காதில் விழுந்த சமாசாரமெல்லாம் நான் நம்பாதிருந்தது என் பிசகு என்று இப்போது தெரிகிறது. இன்ஸால்வென்ஸிப் பேர்வழிகளும், குதிரைப்பந்தய வீரர்களும், பலதரம் சிறை சென்று கே. டி. யென்று பட்டம் பெற்ற பிரபுக்களும் உங்களுடைய சினேகிதர்களாயிருக்கிருர்கள் என்பதைப் பார்த்தால் நாக்கைப் பிடுங்கிக் கொண்டு சாகலாம்போல அவமானமாயிருக்கிறது. ரத்னம், தான் கெட்டதுமல்லாமல் உன்னையுமா இந்த கதிக்கு ஆளாக்கியிருக்கிருன். ஐயோ அவமானமே!" என்று அவர் கூறி முடிப்பதற்குள் அவர் முதுகில் அந்த சோதாக்களின் கரங்களால் தடார் புடார் என்று உதைகள் விழுந்ததுடன் "டேய்! சாகலாம் போலவா விருக்கிறது? செத்துப்போ. பத்திரம். நாக்கையடக்கிப் பேசு." என்ற வார்த்தைகளும் சப்தித்தன.

தன் தகப்பனுரை இச்சோதாக்கள் அடிப்பதுமட்டும் சுந்தரியால் தாங்க முடியவில்லை. இயற்கைப் பாசம் வந்து மூடிக் கொண்டது. "பிரதர்! பிரதர்!! இப்படி ஆத்திரப்பட்டுக் காலித்தனமாய் அடிக்காதீர்கள். ஏதோ அவர் தெரியாத்தனமாய் சொல்லிவிட்டார். எங்களுக்காக நீங்கள் கொஞ்சம் பொறுத்துக் கொள்ளக் கூடாதா?" என்ருள்.

இவ்வார்த்தைகள் அவள் பிதாவின் கோபத்தையும் அவமானத்தையும் இன்னும் பதினுயிரம் மடங்கு கிளப்பிவிட்டன. "சீச்சீ! புத்திகெட்டப் புழுவே! தெரியாத்தனமாகவா சொல்லுகின்றேன். ஒருதரம் அல்ல. லக்ஷம்தரம் வேண்டுமானுலும் ஊர்ஜிதப்படுத்திச்

சொல்லுவேன். முதலில் நீ உள்ளே போகிருயா இல்லையா? இந்த சோதாக்கூட்டத்துடன் சரிசமமாக நின்று பேச உனக்கு அவமானமாயில்லையா? போ உள்ளே" என்று அவள் கையைப் பிடித்திழுத்துப் பக்கத்து அறையில் தள்ளினர்.

தன் மாப்பிள்ளையை நோக்கி, "ரத்னம்! இவ்வளவு கேவலமான நிலைமைக்கு நீ வந்திருப்பது மிகவும் வெறுக்கத்தக்கதாயிருக்கிறது." என்று ஆத்திரத்துடன் சொன்னர்.

ரத்னம் கோபத்துடன் தங்கம்மாளை நோக்கி "எல்லாம் உன்ஞல்தான் இந்த ரகளை ஏற்படுகிறது." என்று கூறுகையில் தங்கம்மாள் இடைமறுத்து "ஆமாம்பா! என்ஞல்தான் எல்லாம் ஏற்படுகிறது. தகப்பனில்லாத மூன்று குழந்தைகளை வைத்துக்கொண்டு ஆதிமுதல் நான் கஷ்டப்பட்டகாலையில், எனக்காகப் பலவிதத்திலும் பாடுபட்டுக் காப்பாற்றியதுமல்லாமல் எனக்காகவே உனக்குத் தன் பெண்ணையும் கொடுத்து உன்னையோர் உருப்படியாக்க வேண்டி இன்றும் நாளையும் சிரத்தையுடன் முனைந்துவரும் என் தமையன் இல்லாது போனல் அப்போது உன்கதி எப்படியாகியிருக்குமென்று சற்று நினைத்துப்பார்." என்ருள்.

**சங்கரன் :**—தங்கம்! சங்கீதத்தின் அருமையே தெரியாதவனுக்கு ராக தாள மேன்மையைப்பற்றி பேசினல் எப்படியோ அப்படித்தான் நீ இவனிடம் முறையிடுவது. உலகத்தில் மனிதனய்ப் பிறந்த ஒவ்வொருவனுக்கும் பிரதான தெய்வம் தன் தாயார் என் பதைக்கூட மறந்து நாஸ்திகப்பூண்டுகளோடு சேர்ந்து ஆஸ்திகத்தையும் அறவே மறந்துவரும் இவனை அந்த கடவுள்தான் பார்த்துக்கொள்ளவேண்டும்.

**ரத்னம் :**—(ஆத்திரத்துடன்) மாமா! ஏதோ பெரியவராயிற்றேயென்றும், உங்கள் மகள் எதிரிலேயே அவமதித்தால் அவள்மனம் நோகப்போகிறதே என்றும் நான் மரியாதையாக வாயை மூடிக்கொண்டிருக்க இருக்க, நீர் அதிகமாக வளர்த்திக்கொண்டேபோகிறீர். உம்முடைய பெண்ணை எப்போது என்கையில் கொடுத்தாய் விட்டதோ இனி அவளைப்பற்றி உமக்கு யாதொரு உரிமையும் கிடை

யாது என்பது ஞாபகமிருக்கட்டும். என் குடும்பத்தில் நான் எப்படியிருந்தாலும் அதைப்பற்றி பிறர் கேட்கவேண்டியது அனுவசியம்.

**சங்கரன்:**—சீ, அறிவிலியே! இந்த சட்டம் பேசும் நீ கடவுளின் சட்டத்தை நீயே மீறுவது ஏன் உனக்குத் தெரியவில்லை? பெற்ற தாயென்றால் ஈ எறும்பு முதல் எண்ணுயிரம் ஜீவராசிகளுக்கும் தனியாக ஒரு பிரேமை சுரக்க, உனக்கு மட்டும் ஹ்ருதயம் ஏன் வற்றிவிட்டது? நான் உன் தாய் மாமனானதால் இந்தக் குடும்ப விஷயமாய் உனக்குச் சொல்வதற்குப் பாத்தியதையிருக்கிறது. அதைப் பற்றிச்சொட்டுசொல்ல உனக்குயாதொரு அதிகாரமுமில்லை. கண்டகாலிக் கழுதைகளுடன் உன் மனைவியை சகவாஸம் செய்யவிட்டு ஊரார் அவளை விபசாரியென்று ஏளனம் செய்துப் பரிஹஸிப்பதில் உனக்குக் கொஞ்சமும் வெட்கமில்லை; நான் உண்மையைச் சொல்வதில்தான் உனக்கு வெட்கம் பொத்திக் கொள்ளுகிறதோ?"

என்று முடிப்பதற்குள், அக்காலிகள் "டேய்! நாங்களாடா காலிக்கழுதைகள்? கழுதை எப்படி உதைக்கின்றது என்று இப்போது பாரடா!" என்று மிருகத்தனமாகத் தங்கள் சோதாத்தனத்தைக்காட்டி உதைக்க வாரம்பித்தார்கள்.

முதலில் அடித்தபோது அச்சோதாக்களை வேண்டாமென்று தடுத்த சுந்தரி, இச்செய்கையைப்பார்த்துச் சற்று நடுங்கிவிட்டாள். அந்த முரடர்கள் எங்கே தன்பிதாவை அடித்துக்கொன்று விடுவார்களோவென்ற பயமும் உண்டாகிவிட்டது. தன் புருஷனை நோக்கி "ஐயோ! இதென்ன பரிபவம்! வீணாக ரகளையுண்டாகி பெரியவிபத்தில் வந்து முடிந்துவிடும்போலிருக்கிறதே! அவர்களை அனுப்பிவிடுங்களேன்....அப்பா!....நீங்கள் போய் விடுங்கள். இங்கு நிற்க வேண்டாம். என்னைப் பற்றிக் கவலைப்படவேண்டாம்." என்று தன்னை மீறிக்கதறினாள்.

சங்கரனுக்குத் தன் மகளின் வார்த்தை கர்ண கடூரமாயிருந்ததோடு அவள் தன்னை அப்பாவென்று அழைத்ததானது பொருத்தமற்றும் வெறுப்பாயும் தோன்றியது. "சீச்சீ! துஷ்ட மிருகமே! அப்பாவாம் அப்பா. இனி நான் உனக்கு அப்பனுமில்லை. நீ எனக்கு மகளுமில்லை. எல்லாம் இந்த நிமிடத்துடன் விட்டது. தங்கம்! இனி

அரை க்ஷணமும் இந்த பாபக்குகையில், சண்டாள நரகம் போன்ற வீட்டில் இருக்காதே. இந்த துராத்மாக்களிடமிருந்து அவஸ்தைப் பட்டுச் சாவதைவிட குளத்தில் விழுந்து சாகலாம். உன் விதியை எண்ணிக்கிளம்பி வா !

சுந்தரீ ! உன்னைப்பெற்ற தகப்பன் உன்ஊழலைக் கண்டித்து உன்னைத்திருத்தவந்தது உனக்கு விஷமாகத் தோன்றுகிறது. இந்த அட்ட காஸத்தின் பலனால் உன்னை சந்திசிரிக்கும்போது நீ இந்தநாளையும் என்னையும் நினைக்கும் காலம் வரும்...என்று கூறிக்கொண்டே அந்த சோதாக்களையும் மருமகனையும் சேர்த்து தடார்புடார் என்று அடித்துவிட்டு, தங்கம்மாளை இழுத்துக்கொண்டு தடதட வென்று கிளம்பிச்சென்றார்.

இதைக்கண்ட அந்த சோதாக்கள் கடகடவென்று நகைத்துக் கொண்டே, "சபாஷ்! துலைந்தது சனியன்கள்!...உங்களைப்போன்ற பேர்வழிகளுக்கு கிணறு குளந்தான் பொருத்தமான இடம் போங்கள் ! போங்கள் " என்று ஆர்ப்பரித்தார்கள்.

ஆனால், பெத்ததாயார் என்ற பசை ரத்னத்தின் மனத்தில் அடியோடு அற்றிருப்பினும், சுந்தரிக்கு மட்டும் பெற்றபிதா பதறிய வாறு செல்வதானது ஒருமாதிரியான சங்கடத்தை உண்டாக்கிவிட்டது. தன்னையறியாத ஓர் பாசத்துடன் "அப்பா ! அப்பா !" என்று கூவிக்கொண்டு பின்னாலேயே ஓடினாள்.

இதைப்பார்த்த ரத்னம் கோபமும் வெறுப்பும் கலந்த தொனியில் " ஏய் சுந்தரீ ! இதென்ன புத்திகெட்டத்தனம் ! உன் அப்பன் பின்னால் ஓடினால், அப்படியே நீயும் ஓடிவிடு. திரும்பிப்பார்க்காதே' என்று ஒரு கர்ஜனை செய்தான்.

சுந்தரி அலறியபடியே "ஐயோ ! நீங்கள் இப்படிப் பேசுவது சற்றும் சரியில்லை. கொஞ்சம் நிதானித்துப்பார்த்தால் அப்பா சொல்வதும் சரியாகத்தான் தோன்றுகிறது. பெரியவரை இம்மாதிரி மனம் நோகச்செய்து அனுப்புவது சரியில்லை. அவரைக் கூப்பிடுங்கள் " என்று வேண்டினாள்.

ரத் :—கூப்பிடுவதா ? நானா ! இனிமேல் உன் அப்பனையா ! சீச்சீ ! உனக்காக இம்மாதிரி இழிவான காரியங்களை ஒருபோதும்

[stamp] ... ஆவணக் காப்பக

நான் செய்யமாட்டேன். உன்னை விபசாரிஎன்று உன்னெதிரிலேயே கூறிய உன் அப்பனையா நீ அழைக்கவேண்டுமென்கிறாய்? கெட் ஔட். உம்" என்று கூறி சுந்தரியைப்பிடித்து வீதியில் தள்ளினான்.

அதே சமயம் பள்ளிக்கூடத்திற்குச் சென்றிருந்த ரத்னத்தின் பெண்ணும் பிள்ளையும் திரும்பி வந்தார்கள். அவர்கள் வரும்போது நடந்த இந்த சம்பவத்தைப் பார்த்துக் கூச்சலிட்டுக் கொண்டு ஓடி வந்து சுந்தரியைச் சேர்த்து அணைத்துக்கொண்டு தகப்பனாரை ஒரு முடுக்கான பார்வை பார்த்தபடியே "என்னப்பா இது? வரவர உங்கசெய்கை இவ்வளவு கேவலமாய்க்கொண்டே வருகிறது. உங் கம்மாவுடன்தான் சதா சண்டைபோட்டு உபத்திரவிப்பது போதா மல் எங்கம்மாவிடமும் ஆரம்பித்துவிட்டீர்களா? சற்று வாசலில் வந்து பாருங்கள். எத்தனைபேர் இங்கேயே வேடிக்கை பார்க்கி றார்கள்." என்று சொல்லிவிட்டு தாயை நோக்கி "உள்ளே வாம்மா! அவமானமாயிருக்கிறது." என்று கூறியபடியே சுந்தரியை அழைத்துக்கொண்டு உள்ளே வந்தார்கள்.

ரத்னம் :—சீ, கழுதைகளா! உங்களுக்கு அந்தக்கிழப் பிணத் தின் உபதேசம் தலைக்கேறி விட்டதோ? இனிமேல் அந்த ஜம்பம் இங்கு சாயாது, பேசாமல் உள்ளே போங்கள் என்றான்.

ரத்னத்தின் மகளாகிய லீலாவுக்குச் சரேலென்று கோபம் வந்துவிட்டது. "இதோ உள்ளே போகிறேனப்பா. உங்களோடு நிற்கும் ஆட்களைப் பார்த்தாலே இங்கு பெண்கள் நிற்க யோக்யதை உள்ளதா?... அம்மா! நீயும் உள்ளேவா." என்று சுந்தரியின் கையைத் தரதரவென்று பிடித்திழுத்துக் கொண்டே உள்ளே போய்விட்டாள்.

லீலாவின் வார்த்தைகள் இச்சோதாத் தடியன்களுக்குச் சுருக் கெனத் தைத்தன. தங்கள் குணத்தின் "ட்ரேட் மார்க்" போன்ற அசட்டுச் சிரிப்புடன் "என்ன பிரதர்! நாங்கள் வெகுநாளாய் சொல் வதெல்லாம் உன் காதில் ஏறாமலிருந்ததே. அந்தக் கிழத்தை அன்றே வீட்டை விட்டு ஒட்டியிருந்தால் உன் குழந்தை லீலாவின் புத்தி இவ்வளவு மாறியிருக்காதல்லவா? தான் கெட்டதுமில்லாமல் வளர்கிறகுழந்தையையும் பாழடித்துவிட்டதே பீடை. இந்த சின்ன

வயதில் ஸொஸைடியிலே மூவ்பண்ணத் தெரியாவிட்டால், எப்படி பிரதர் நாம் ப்ளான் பண்ணபடி நடக்கும் ?" என்றார்கள்.

இதைத் தூரவிருந்து கேட்டுக்கொண்டிருந்த லீலா தாங்கமாட்டாத கோபத்துடனும், வெறுப்புடனும்நோக்கி, "தூ! எங்கப்பாவை இவ்வளவு தூரம் செய்தது போதாமல் எனக்கும் ப்ளான் தயாராக வைத்திருக்கிறீர்களா? உங்கள் ப்ளானுக்குள் சிக்கும் பூச்சி நானல்ல வென்பது ஞாபக மிருக்கட்டும். உங்களெல்லோருக்கும் கடவுள் ஒரு ப்ளான் தயாரித்து வைத்திருக்கிறார் என்பதும் நினைவிலிருக்கட்டும் ; எழுந்து போங்கள்" என்று கூறிவிட்டு, அவளிருந்த அறைக்கதவைப் படார் என்று அறைந்து சாத்தினாள்.

ரத்தினத்திற்கு ஒன்றும் தோன்றாமல் மூளையே குழம்பிவிட்டது. "பிரதர்ஸ்! இன்று என்னமோ என் மனதே சரியாயில்லை. சற்று நேரம் தனியாக இருக்க விரும்புகிறேன். நீங்கள் சென்று வாருங்கள்" என்றான்.

அதற்கு அவர்கள் பரிகாஸமாக சிரித்துக்கொண்டே, "போடா பைத்தியக்காரா ! பெரிய மலைபுரண்டு தலைமீது விழுந்து விட்டது போலப் பேசுகிறாயே ? எழுந்துவாடா ! கிளப்புக்குப் போய் ஒரு சீட்டுக் கச்சேரி போட்டால் எல்லாம் சரியாகிவிடுகிறது. பிறகு சந்தோஷத்துடன் வீடுதிரும்பலாம். எழுந்திரு" என்று ரத்னத்தின் கையைப் பிடித்திழுத்தார்கள். ரத்னமும் அதற்கு இசைந்து அவர்களுடன் சென்றான்.

---


# அனாதைப் பெண்

**அரிய புதிய டாக்கி நாவல்**

**பல ஆப்டோன் படங்களுடன் கூடியது**

**இரண்டாம் பதிப்பு விலை ரூ. 1-4.**

# 3

தன் தாயாருடன் உள்ளே சென்ற லீலா, வழக்கம்போலத் தன் பாட்டியைப் போய் பார்த்தாள். தினமும் பள்ளிக்கூடத்தி லிருந்து வந்ததும் வெகு ஆவலுடன் எதிர்நோக்கி அழைக்கும் பாட்டியைக் காணுததால் ஒருவிதமான சந்தேகத்துடன், "பாட்டீ! பாட்டீ!" என்று கூவியபடி ஒவ்வொரு உள்ளாகத் தேடினுள்.

பதிலே கிடைக்காததால் அவளுடைய சந்தேகம் இன்னும் அதிகரித்தது. ஒரு வேளை பூஜையறையி லிருக்கின்ருளோ வென்று அங்கும் போய் பார்த்தாள். அங்குமில்லாததால் நேரே தாயாரிடம் ஓடிவந்து, "அம்மா! பாட்டி எங்கேம்மா காணும்?" என்று அபாரமான ஆவலுடன் கேட்டாள்.

சுந்தரிக்குத் தன் தகப்பனுர் வீட்டைவிட்டுப் போகும்போது மாத்திரம் கொஞ்சம் வருத்தம் பாதித்ததேயன்றி, அவள் மனத்தில் வேரூன்றி யிருக்கும் துர்க்குணங்களே பழையபடியும் வந்து சூழ்ந்துகொண்டன. தங்கம்மாளால் தன் மகள் கெட்டுப் போகிருள் என்பதே அவளது நோக்கமாதலால், அவ்விருவரையும் எப்படியாவது பிரித்துவிடவேண்டுமென்று வெகு நாளாக எதிர் பார்த்திருந்த கோரிக்கை இன்று நிறைவேறியதுபற்றி, அவள் மனம் பூரித்தது.

பாட்டியைப்பற்றி லீலா கேட்டவுடன் சிள்ளென்று சீறி விழுந்தபடி, "உன் பாட்டியும் நீயும் பாழாய்ப்போக! உன் பாட்டியை எந்த வெள்ளமும் அடித்துக்கொண்டு போய்விடவில்லை. நீ பிலாக்கணம் பாட ஆரம்பிக்கவேண்டாம்!" என்று கூறி முடிப் பதற்குள், லீலா இடைமறுத்து, "அம்மா! நீ என்ன என்னைச் சின்ன பாப்பாவாக நினைத்துப் பேசுகிருயா? பாட்டி எங்கே யென்ருல், அதற்குப் பதிலைக் காணும். ஏதேதோ அளக்கிருயே! பாட்டி எங்கே போனுள் சொல்லும்மா. தினம் அப்பாவும் நீயும் சொல்லிக் கொண்டிருந்ததுபோல சண்டைபோட்டுத் திட்டி அடித்துத் துரத்தி விட்டீர்களா என்ன? இன்று சத்காலக்ஷேபம் நடந்ததா இல்லையா? தினம் வரும் அம்மாமிகளெல்லாம் வந்தார்களா இல்லையா?" என்று அடுக்கடுக்காகக் கேட்டாள்.

**சுந்தரி**:—அம்மாமிகளைப் பாரு அம்மாமி! அவாளைக்கொண்டு ஆறுலெ போட்டாப்பலே யிருக்கு. தினம் தினம் தாம்பூலம் வைத்து அழைக்கணமா யென்ன? அழையாத வீட்டுக்கு நுழைகிற சம்பந்திபோல எல்லாப் பீடைகளும் வந்து சரியான மரியாதை களுடன் போய்ச் சேர்ந்ததுகள்.

**லீலா**:—என்ன! மரியாதைகளா? என்ன செய்துவிட்டீர்கள்? ஐயோ! என்ன நடந்தது சொல்லேன்...பாட்டி எங்கேம்மா? அப்பாவும் நீயும் பாட்டியை ஏதாவது செய்துவிட்டீர்களா?

**சுந்தரி**:—ஆமாம். உங்க பாட்டி வாழைப்பழம்; அதை நாங்கள் உரித்துத் தின்றுவிட்டோம். லீலா! நான் கடைசீதரமாச் சொல் றேன் கேளு. உன்னைப் பெற்ற தாயார் தகப்பனைவிட சதா பாட்டி பாட்டி யென்று என்ன பிதற்றல்? வீட்டிலே சதா சோம்பேறிக் கூட்டங்களைக் கூட்டிக்கொண்டு, சந்தைக் கடைபோல் இரைச்சல் இடுவது உங்கப்பாவுக்குப் பிடிக்கவில்லை யென்பது உனக்குத் தெரியுமா தெரியாதா?

**லீலா**:—அம்மா! நீ விடுகதைபோலக் கூறிக்கொண்டே போவ தைப் பார்த்தால் ஏதோ விபரீதம் நடந்திருக்கவேண்டும் என்று எனக்குத் தோன்றுகின்றது. ஒரு மரத்திற்கு அதன் வேர் எவ் வளவு பிரதானமோ அதேபோல குடும்பத்திற்கு ஆணி வேர் போன்றுள்ள என் பாட்டி பிரதானம் என்பது உனக்குக் கொஞ் சங் கூடத் தோன்றுவதே கிடையாது. பாட்டியுடன் சேரும் கூட் டங்கள் சோம்பேறிக் கூட்டங்களா அல்லது அப்பாவுடன் சேரும் கூட்டங்கள் சோம்பேறிக் கூட்டங்களா வென்பதைச் சற்று யோசித்துப் பாரு. அந்த உண்மை தெரியாமல் ஏனம்மா நீ வீணைகத் திட்டுகிறாய்? இகத்திற்கும் பரத்திற்கும் சார்த்தகமான சத்விஷயத் தின் ருசியை யறியாமல், நீயும் அப்பாவைப்போல் நாஸ்திகத்தன மாகப் பேசுகிறாயே! என்னதான் நடந்தது சொல்லும்மா! பாட்டி எங்கே?

**சுந்தரி**:—லீலா! ஏதேது அதிகப்பிரசங்கித்தனமாகப் பேசு கிறாய்? நடப்பதற்கு என்ன இருக்கிறது நாடகம்? இங்கு சோம் பேறிக் கூட்டம் போடக்கூடாது என்று உங்கப்பா திட்டினார்.

அதற்குக் கிழவி கொஞ்சம் நாட்டியமாடினுள். அந்தச் சமயத் திற்குத் தகுந்தாற்போல உன் தாத்தா வந்திருந்தார். அண்ணனும் தங்கையும் முறுக்கிக்கொண்டு போனுர்கள். எங்கே போனுர்க ளென்று யாருக்குத் தெரியும்? இந்த ஒன்னரையணு கோபம் எத்தனை நேரம்? எங்கேயாவது இரண்டு தெரு சுற்றிவிட்டுப் பல்லை இளித்துக்கொண்டுவந்து நிற்பாள். அவளுக்குப் போக்கிடம் எது? அதற்குள் ஏன் அலைந்து சாகிருய்?

லீலா:—அம்மா! நீ ஏதோ உண்மையை மறைத்துப் பேசுவ தாக எனக்குத் தோன்றுகிறது. பாட்டியைக் கேவலம் ரோஷம் கெட்ட பேமானியென்று நினைக்காதே! நீ மறைத்தாலும் எனக்கு விஷயத்தை அறிய வகை இருக்கிறது. எதிர்வீட்டுப் பாட்டி யைக் கேட்டால் உண்மை தானுகத் தெரிகிறது" என்று கூறிக் கொண்டே சுந்தரியின் பிடிக்கு அகப்படாமல் எதிர்வீட்டுக்கு ஓடினுள்.

அதேசமயம் எதிர்வீட்டுப் பாட்டியம்மாள் தங்கம்மாளின் உத்தம குணத்தைப்பற்றிப் புகழ்ந்தும், ரத்தினத்தின் அக்கிரமச் செய்கையைப்பற்றி இகழ்ந்தும் மற்ருெரு அம்மாளிடம் பேசிக் கொண்டிருந்தாள். ஆவலும் பதைப்பும் நிறைந்த முகத்துடன் வரும் லீலாவைப் பார்த்ததும் கிழவி பரிதாபத்துடன், "ஏண்டி யம்மா லீலா! பாட்டியைத் தேடிக்கொண்டு வந்தாயா? உங்கப் பன் செய்த காரியம் உனக்குத் தெரியுமோ இல்லையோ?" என்று முன்கூட்டியே விசாரித்தாள்.

லீலா:—"பாட்டீ! நான் இப்போதுதான் பள்ளிக்கூடத்தி லிருந்து வந்தேன். எனக்கு ஒரு சமாசாரமும் தெரியாது. உங் களிடம்தான் தெரிஞ்சுகொண்டு போகலாம் என்று வந்தேன். என்ன நடந்தது? என் பாட்டி எங்கே போயிருக்கிருள்? உங் களுக்குத் தெரியுமா?" என்று கேட்கும்போது லீலாவின் கண் களில் நீர் துளிர்த்துவிட்டது.

பாட்டி:—அம்மா குழந்தை! ஹிரணியன் வயிற்றில் பிரஹ் லாதன் பிறந்ததுபோல, அந்த மகா பாபி வயிற்றில் நீ எப்படியோ பிறந்தாய். இன்று உன் அப்பன்செய்த அக்கிரமத்தைக் கேட்டால்,

நீ சகிக்கவேமாட்டாய். அந்தக் கொடிய பாதகன் எங்களை வாயில் வந்தபடியெல்லாம் திட்டி கழுத்தைப் பிடித்துத் தள்ளாத குற்றமாக அந்த நாலு சோதாக்களுடன் சேர்ந்துகொண்டு விரட்டினுன். அதோடு விட்டானு ? அகஸ்மாத்தாக வந்த உன் தாத்தாவை அந்தச் சோதாக்களைக்கொண்டு எலும்பு நொறுங்க அடிக்கச் செய்து, பெற்ற தாயாரையும் அவரையும் சொல்லத்தகாத வார்த்தைகளைச் சொல்லி வீட்டைவிட்டுத் துரத்திவிட்டான். படுநீலியான உன் தாயாரும் மனம் கூசாமல் பார்த்துக்கொண்டுதான் நின்ருள். மகா குணவதியாயும் மானவதியாயும் உள்ள உன் பாட்டி கண்ணீர் தாரைதாரையாகப் பெருகப் பரிதாபகரமாக வெளியே சென்ருள்.

லீலா :—(பதறியவாறு) ஐயோ, பாட்டீ! நீங்களாவது என் பாட்டியை வெளியிலே போகாது தடுக்கக் கூடாதா ? தள்ளாத கிழவி அவள் எங்கே சென்ருள் என்று நான் அவளைத் தேடுவது ?

பாட்டி:—எண்டியம்மா! ஆயிரம்பாடுபட்டுப் பெற்றுவளர்த்த மகனும், சொந்த அண்ணன் மகளாகிய மருமகளும் கொஞ்சமும் ஈவிரக்கமும் பச்சாத்தாபமுமின்றித் தனக்காக இல்லாவிட்டாலும் லோக அபவாதத்திற்குக்கூட கட்டுப்படாமலும், பெற்றதாயார் என்ற வார்த்தைக்குக்கூட மதிப்பு கொடாமலும் நிர்த்தாக்ஷிண்யமாக வீட்டைவிட்டுத் துரத்தும்போது எதிர்வீட்டுக்காரியாகிய நான் வந்து சொன்னுல் அவள் மனம் சமாதானமாகுமா ? அப்படியிருந்தும் என் மனது கேட்காமல் பின்னுலேயே ஓடினேன். ‘ஏதோ அவன் அறியாத்தனமாகச் செய்துவிட்டான். நீ திரும்பி வந்துவிடு’ என்று அழைத்தேன். உன் தாத்தாவும் சம்மதிக்கவில்லை. அவள் மனமும் இடங்கொடுக்கவில்லை. “என்னைத் தொந்தரவு செய்யவேண்டாம்” என்று சொல்லிக்கொண்டே போய்விட்டாள். நான் என்னடீம்மா செய்வது ?

லீலா :—பாட்டீ! ஒருகால் எங்க அத்தைவீட்டுக்கு அல்லது பெரியப்பா வீட்டுக்குப் போயிருப்பாளா ? அல்லது எங்க தாத்தாவே அழைத்துக்கொண்டு போயிருப்பாரா ? இப்படி எங்காவது போயிருந்தால், ஒரு வேளை தேவலை. ரோஷம் தாங்காது எங்

காவது தற்கொலை புரிந்துகொள்ளப்போகிறுளே என்று எனக்குப் பயமாக இருக்கிறது.

பாட்டி :—லீலா ! அவள் மகாவிவேகி. விஷயமறிந்த பண்டிதை. கொடிய பாபமாகிய தற்கொலையை அவள் நாடவேமாட்டாள். அதைப்பற்றி எவ்வளவோ தெளிவாக எங்களுக்கெல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கிறுள். ஆகையினுல், அவள் தற்கொலை புரிந்துகொள்ளமாட்டாள் என்றுதான் நான் நினைக்கிறேன். அவள்போன வேகத்தைப்பார்த்தால், திரும்பி இங்கு வருவள் என்றுமாத்திரம் எனக்குத் தோன்றவில்லை. வருத்தப்படாதே.

லீலா :—பாட்டி ! எங்குபோயிருப்பாள் என்று நான் நினைப்பது ? அத்தைவீட்டிற்குப் போகவேண்டுமென்றுலும், பெரியப்பா வீட்டிற்குப் போகவேண்டுமென்றுலும் அந்த ஊர்களுக்கு ரயில் இரவுதான் புறப்படுகிறது. ஆகையினுல், அதுவரையில் ஸ்டேஷனில்தான் உட்கார்ந்திருக்கவேண்டும் என்று நினைக்கிறேன். தயவு செய்து எனக்குத் துணைவந்தால் ஸ்டேஷனுக்குச் சென்று அங்கு பாட்டி இருந்தால், கெஞ்சிக் காலில் விழுந்து அழைத்துக்கொண்டு வரலாம். சற்று வருகிறீர்களா ?

பாட்டி :—உன் பாட்டியிடத்தில் உனக்கிருக்கும் அளவுகடந்த பிரேமையில் நூற்றிலொருபங்குகூட உன் அப்பனுக்கு இல்லையே! ஏண்டியம்மா ! எனக்குந்தான் மனம் பதபதவென்றடித்துக் கொள்ளுகிறது. சத்காலக்ஷேபத்திற்காக, வீட்டிற்கு வந்ததற்கே உன் அப்பனுல் அவமானமடைந்தோமே ! உன்னைத் தனியாக ஸ்டேஷனுக்கு அழைத்துக்கொண்டு சென்றுல், என்னைக் கொலை தான் செய்துவிடுவான்.

லீலா :—(பாட்டியை நமஸ்காரம் செய்தவாறு) “ அவர் இப்போது வீட்டில் இல்லவே இல்லை. சீட்டாட்ட மயக்கத்தில் மூழ்கிக் கிடக்கிறுர். அதற்குள் போய் பார்த்துவிட்டு வந்துவிடலாம். தயங்காதீர்கள். வாருங்கள். கிழ ஆத்மாவைத் தவிக்கவிட்டால், அது தெய்வத்துக்கே பொறுக்காது ” என்று கிழவியின் கையைப் பிடித்திழுத்து கெஞ்சினுள். கிழவியும் தட்டமாட்டாது லீலாவுடன் கிளம்பினுள்.

இருவருமாக நடைப்பக்கம் வரும்போதே, தன்வீட்டில் தன் தாயார் நெருப்புப்பொறி பறக்க நின்றிருப்பதைப் பார்த்தவுடன் பயத்தினால் லீலாவின் தேகம் சற்று நடுங்கியது. எனினும் அதைப் பொருட்படுத்தாமல் கிழவியின் கையைப் பிடித்திழுத்துக்கொண்டு கொல்லைப்புறமாக ஸ்டேஷனை நோக்கி விரைவாக நடந்தாள்.

## 4

மனமுடைந்து விசனத்துடன் வெளியே சென்ற தங்கம்மாளும், சங்கரனும் எங்கேபோகிறோம், என்ன செய்கிறோம் என்பது தெரியாமல் வெகுதூரம் நடந்தார்கள். வழியில் அவர்களுக்குத் தெரிந்தவர்கள் எவ்வளவு சமாதானம் சொல்லியும் தங்கம்மாளின் மனம் கேட்கவில்லை. தான் சில நாளைக்கு வெளியே யிருந்தபடியே தன்மகனின் சோதா சகவாஸத்தை விலக்கி சீர்திருத்தினால் தான் அக் குடும்பம் சிறப்பாக விருக்கும் ; இல்லையேல் அனியாயமாக அதோகதியாகிவிடும் என்று ஓர் எண்ணம் உறுதியாகப் பதிந்துவிட்டதால், அவள்வீடு திரும்ப இசையவில்லை.

ஆனால், தன் சொந்த மகனைவிடத் தன் பேத்தி லீலாவைப் பிரிய மனம் வரவேயில்லை. தன்னைக் காணாமல் அவ்வுத்தமச் சிறுமி என்ன தவிப்பாளோ, எங்கெங்கு தேடுவாளோ, என்ன நினைப்பாளோ என்றெல்லாம் மனத்தில் போராடியது. இருப்பினும் ரத்னம், சுந்தரி இருவர் முன்பும் வருவதற்கு அவள் மனம் கொஞ்சங்கூட இடம் கொடுக்கவில்லை.

தன் அண்ணனை நோக்கி, “அண்ணா! பொழுதோ அஸ்தமிக்கும் சமயமாகிவிட்டது. நாம் இருவருமோ தள்ளாதவர்கள். கால்போனபடி நடக்கிறாயே, நாம் எங்கு போவதாக உத்தேசம்?” என்று கேட்டாள்.

சங்கரன் :—தங்கம்! இந்த அவமானத்தை என்னால் சகிக்க முடியவில்லை. ஊரெல்லாம் ரத்தினத்தைப்பற்றியும் சுந்தரியைப் பற்

றியும் எவ்வளவு கேவலமாகச் சொல்லிக்கொள்கிறார்கள் என்பது உனக்குத் தெரியுமா? உலகத்திலுள்ள கெட்ட பழக்கங்கள் எத்தனையோ அத்தனைக்கும் உன் மகன் இருப்பிடமாகிவிட்டான் என்றும் மிகவும் கேவலமான முறையில் சுந்தரி நடந்துகொள்கிறாள் என்றும் பலபேர் பலவிதமாகச் சொல்வதைக் கேட்டு என் மனம் சகியாமல் அவர்களைத் திருத்துவதற்காகவே நேரே வந்தேன். இவ்வளவு விபரீதமாகும் வரையில் நீ எப்படி பார்த்துக்கொண்டிருந்தாய்?

**தங்கம்** :—அண்ணா! இந்தக் கேள்வி நீ கேட்பது நியாயம். கேட்பாய் என்றும் எதிர்பார்த்தேன். நீ நேரில் பார்த்த இந்த ஐந்து நிமிஷத்திலிருந்தே எல்லாம் தெரிந்துகொண்டிருக்கலாம். என்னை அவர்கள் ஒரு மனுஷியாக மதித்தாலல்லவோ என் வார்த்தைக்கு மதிப்பு ஏற்படும்? லீலாவை நான் கெடுத்துவிட்டேனாம். அவர்களுடைய வழிக்கு அவள் வரமாட்டேன் என்கிறாளாம். அதற்கு நான்தான் காரணமாம். அதற்காக என்னை அவ்விருவரும் திட்டுவது கொஞ்சநஞ்சமல்ல. நான் எதைச் சொல்லப்போனாலும் அதையெல்லாம் குற்றமாக எடுத்துக்கொண்டு ஆடுகிற ஆட்டம் அந்த ஆண்டவனுக்கே வெளிச்சம். நான் என்ன செய்வேன் சொல்லு.

**சங்கரன்** :—இதற்கெல்லாந்தான் தலையெழுத்து, கர்மம், விதியென்றெல்லாம் சொல்லுகிறார்கள். சுந்தரியினுடைய பால்ய சிநேகிதை ஒருத்தி நான்கு குழந்தைகளைப் பெற்ற பிறகு குழந்தைகளையும் புருஷனையும் மனந்துணிந்து விட்டுவிட்டு, எவனையோ இழுத்துக் கொண்டு ஓடிவிட்ட சண்டாளி, இப்போது சுந்தரியுடன் மீண்டும் சிநேகம் செய்வதாகக் கேள்விப்படுகிறேன். பாலாமணியென்ற பெயர் கொண்டவள் சுந்தரியிடம் அடிக்கடி வருகிறாளா உனக்குத் தெரியுமா?

**தங்கம்** :—அண்ணா! அந்த வெட்கக்கேட்டை ஏன் கேட்கிறாய்? ஒரு பாலாமணி மாத்திரம்தானா என்ன? எத்தனை பாலாமணி, சிந்தாமணி, காந்தாமணி, எத்தனையோ ஷோக்கு மணிகளெல்லாம் தினமும் வருவது கணக்கில்லை. அவர்களைப் பார்த்தால் யார் சுமங்கலி, யார் அமங்கலி, யார் சம்சாரி யென்பது ஒன்றுமே

விளங்குவதில்லை. "பாப்" பண்ணின தலைகளும், சுருட்டிவிட்ட சிங்காரத் தலைகளும், தினுசுதினுசாக வரும் காட்சியைப் பார்த்தால் சகிக்கவில்லை. 'சினிமாக்காரிகள்' என்று சிலரைச் சொல்கிறார்களே! அவர்களைவிட இவர்கள் கேவலமானவர்களாகவே தோன்றுகிறது. அவர்கள் வந்துவிட்டால், என்ன அட்டகாஸம்! என்ன கும்மாளம்! அடேயப்பா! சுந்தரிக்காகட்டும், ரத்னத்திற்காகட்டும் தலைகால் தெரிவதே இல்லை. வீடு ரெண்டுபட்டுவிடுகிறது. பிறகு சினிமா ட்ராமா எங்காவது போய்விட்டு இரவு 10 மணிக்கு வருகிறார்கள். இதையெல்லாம் கண்டித்தால்தான், நான் மிகவும் பொல்லாதவள். தாயாரைக் கண்டால் லீலாவுக்குச் சற்றும் பிடிக்கவில்லை. என்ன செய்வது? அந்த ஒரு குழந்தைக்காகவே நான் இத்தனையையும் சகித்துக்கொண்டு அந்த வீட்டிலிருந்தேன். நல்ல சத்காலக்ஷேபம் கேட்க உத்தமமான பத்து பெண்கள் வந்தால், அது சகிப்பதில்லை. இந்தக் கூத்தாடிக் கூட்டத்திற்குக் கேட்பாரே இல்லை. அதில் நீ சொல்லும் பேர்வழி எவளோ எனக்குத் தெரியாதே!

**சங்கரன்** :—தங்கம்! விஷயங்களைக் கேட்கக் கேட்க என் மனம் கொதிக்கின்றது. சுந்தரியின் தாயாராவது அவளைத் திருத்தி நல்வழிப்படுத்துவாளோ என்று நம்புவதற்கு வரவர இடமே இல்லாமலிருக்கிறது.

183083

**தங்கம்** :—ஐயோ! அதென்ன அப்படிச் சொல்லுகிறாய்? மன்னிகூட இதெல்லாம் ஆதரிப்பாளாயென்ன?

**சங்கரன்** :—அந்த வெட்கக்கேட்டையும் வயிற்றெரிச்சலையும் வாயினாலேயே சொல்ல முடியவில்லை தங்கம்! நீ பார்த்த பழைய மன்னியென்று இப்போது நினைக்கிறாயா? அந்தக்காலமெல்லாம் மலையேறிவிட்டது. நல்ல சாயமுள்ள துணியானாலும் சேர்ந்தாற் போல நாலுதினம் வெய்யிலில் போட்டுவைத்தால் எப்படிவெளுத்துவிடுகிறது பாரு. இது நம் கண்ணெதிரில் தெரியும் மாறுதல். அது போலவே தற்பொழுது ஸினிமா மோக மிருக்கிறதே அதன் வேகம் உன் மன்னியின் மனத்தையே மாற்றியிருக்கிறது.

**தங்கம்** :—என்ன? சினிமாப் பைத்தியமா?

சங்கரன் :—வெறும் சினிமா பார்க்கிற பைத்தியம் என்று நினைத்தாயா? வீட்டில் ஏதாவது சச்சரவு ஏற்பட்டு நான் ஒரு வார்த்தை சொல்லிவிட்டாலோ தாறுமாறுக எதிர்த்துப் பேசுவது மல்லாமல் "இந்தப் பாழான அடிமை வாழ்வு என்கிறது இப்போது தான் தெரிகிறது. எனக்கென்ன அழகில்லையா? பாட்டில்லையா? இந்த காலத்திலேதான் எத்தனையோ கிழவிகளெல்லாம்கூட சினிமா வில் ஆடுகிறுர்கள். அப்படி நானும்போய் நாலுகாசு சம்பாதித்தால் அப்போது உங்களுக்கு என்னிடத்தில் மதிப்பு இருக்கும்." என்று மானஹீனமற்றுப் பேசுகிறுள். முதலில் இதை விளையாட்டுப்பேச்சு என்று எண்ணி ஏமாந்தேன். கடைசியில் பார்த்தால் விஷயம் விப ரீதமாகப் போயிருக்கிறது.

தங்கம் :—ஐயோ! என்ன விபரீதம் வந்துவிட்டது?

சங்கரன் :—விபரீதமா? நம் கடைசிக் குட்டி கோமளா இருக் கிறுளே அவளை சினிமாவிலே சேர்ப்பதற்குச் சகல ஏற்பாடுகளையும் செய்துவிட்டாள். திடீரென்று இவ்வளவு தூரம் புத்திகெட்டுவிட்ட தற்குக் காரணம் என்ன வென்று விசாரித்ததில் ஆறுமாதகாலமாக எதிர் வீட்டில் சில சினிமாக்காரர்கள் குடியிருப்பதே என்பது விளங்கியது. நான் எவ்வளவு முட்டிக்கொண்டும் அந்தப் பெண் வீட்டில் நிற்பதேயில்லை. அந்த சினிமாக்காரர்களுடனேயே சுற்றிக் கொண்டிருந்தது.

தங்கம் :—ஐயையோ! இதென்ன அநியாயம்! அவளுக்கு வயது 20 - க்கு மேல் இருக்குமே. காலாகாலத்தில் கலியாணம் செய்யாததின் தோஷமல்லவா இது? இப்படித் திரிந்தால் எவன் அவளை மணப்பான்?.

சங்கரன்:—தங்கம்! நீயும் என் வயிற்றெரிச்சலைக் கிளப்பாதே. எப்பேர்ப்பட்ட வரன் கொண்டுவந்தாலும் அந்த பெண் விவாகத் திற்கு இசையவில்லை. அதோடு அவள் தாயாரும், சுந்தரியும் கூட சேர்ந்துகொண்டு தாளம் போட்டார்கள். இந்த உபத்திரவமெல் லாம் சகிக்காமல்தான் இந்த ஒன்றரை வருஷமாக ஒரு புண்ணிய வானுடன் கூட க்ஷேத்திர யாத்திரை செய்துவந்தேன். வந்தபிறகு அவமானம் அதிகமாகி விட்டதேயன்றிக் குறையும் வழியைக்காண

வில்லை. இப்போது கோகிலா வென்ற பெயருடன் நமது கோமளா பெரிய சினிமா ராணியாகப் பிரகாசிக்கின்ருளாம்.

**தங்கம்** :—என்ன! கோகிலா வென்கிற சினிமாக்காரியா நம் கோமளா! தினம் சுந்தரியும், ரத்னமும் அவளைக் கொண்டாடி 'நம் லீலாவையும் அப்படி பிரகாசிக்கச் செய்யவேண்டும்' என்றல்லவா பேசிக்கொள்கிருர்கள். அடாடா! இவ்வளவு ஆபாசமாகவா நம் குடும்பம் சிதறிவிட்டது?

**சங்கரன்** :—இந்த கோராமையைக் கண்டு சகிக்க முடியாமல் தான் அந்த வீட்டிற்கே போகாமல் ஒரு மாதகாலமாய் கோவிலுண்டா, குளமுண்டா, சத்திரமுண்டா, சாவடியுண்டாவென்று பரதேசிபோல அலைந்தேன். பட்டினியும் பசியும் ஒரு பக்கம் வதைக்க, சுந்தரியைப்பற்றி ஊரார் சொல்லும் வார்த்தை மனதைத் துளைத்தது. ஆகையினல் இங்கு வந்து சில தினங்களிருந்து அவளைத் திருத்தலாம் என்று வந்த எனக்கு இக்கதியாயிற்று.

**தங்கம்** :—அண்ணு! நீ கோமளாவின் விஷயத்தைச் சொன்ன பிறகு எனக்கு லீலாவிடத்தில் பயமாயிருக்கிறது. அந்தப்பிசாசுகள் குழந்தையை என்ன பாடுபடுத்துங்களோ! லீலா நானில்லாமல் என்ன கஷ்டப்படுவாளோ? இதையெல்லாம் நினைத்துப்பார்த்தால் குழந்தைக்காகவாவது நான் எல்லாவற்றையும் மறந்துபோய் வீட்டுக்குப் போய்விடலாமென்று தோன்றுகின்றதே! அண்ணு! நாம் பெற்ற பசங்களிடமே நாம் துவேஷம் வைத்துக்கொண்டால் எப்படி முடியும்? இவ்வளவு வயதும் அனுபவமும் பெற்ற நாமே பொறுமையை இழந்துவிட்டால்...

**சங்கரன்** :—சரிசரி. தங்கம்! போதும் உன் வைராக்கியம். நீ வேண்டுமானல் திரும்பிப் போ. நான் வரமாட்டேன். பேசிக்கொண்டே சுமார் இரண்டு மைல் தூரம் வந்துவிட்டோம். அடுத்த மைலிலுள்ள ஈசுவரன் கோயிலில் திருவிழா நடக்கிறது. நான் அங்கு போகிறேன். நீ வேண்டுமானல் வீட்டுக்குப்போ.

**தங்கம்** :—இரண்டு மைல் தூரமா வந்துவிட்டோம்! சரி. அப்படியானல் நானும் திருவிழா பார்க்க வருகிறேன்.—என்று இருவரும் பேசிக்கொண்டே ஈசுவரன் கோயிலை யடைந்தார்கள்.

அப்போதுதான் அந்திவேளை பூஜையும் தீபாராதனையும் வெகு அழகாக நடந்ததை இருவரும் ஆநந்தமாய் தரிசனம் செய்துவிட்டு ப்ராகாரப்ரதக்ஷணம் செய்துகொண்டு கோவில் வாசல் பக்கம் வந்தார்கள்.

அப்போது நன்ருக இருட்டும் சமயமாகிவிட்டது. இருவரும் என்ன செய்யலாம் என்று யோசித்துக்கொண்டே நிற்கையில் ப்ரம்மாண்டமான மோட்டார்கார்கள் ஒன்றன் பின் ஒன்ருய் நாலைந்து வந்து நின்றன.

அவற்றிலிருந்து ஆண்களும் பெண்களுமாய் நிறைய பேர்வழிகள் இறங்கினார்கள். நவீனநாகரிக ஷோக் சுந்தரிகளும், டம்பாச்சாரிபோன்ற மைனர்களும் வழுக்கைத் தலையுடன் கூடிய தாத்தாக்களும், வெண்சாமரம்போன்ற தலையையுடைய பாட்டிகளுமாக 3 வயது முதல் 70வயது வரையில் மதிக்கக்கூடிய கும்பல் காரிலிருந்து இறங்கிய உடனே கோபுரவாசலில் வேடிக்கை பார்க்கும் கூட்டம் ஒரு நிமிடத்தில் நிரம்பிவிட்டது.

'காரில் வந்தவர்கள் யாரோ பெரிய ஜெமீந்தார்களோ அல்லது ஊர் பார்க்க வந்திருக்கும் அன்னிய ஊர்க்காரர்களோ! சிற்றரசர்களோ!' என்று பலர் எண்ணி வேடிக்கைப் பார்த்தார்கள். அதே எண்ணத்துடன்தான் சங்கரனும் தங்கம்மாளும் இருந்தார்கள்.

வேடிக்கைப் பார்க்கும் கூட்டத்தில் சிறுகச் சிறுக ஒரே இறைச்சலும் ஆரவாரமும் உண்டாகியது. அந்தக் கோவிலின் தர்மகர்த்தா பெரிய அட்டகாஸத்துடன் அங்கு வந்தார். காரில் வந்த பெரிய தனிகரைப் பார்த்துப் பல்லை இளித்தும் கைகளைக் குவித்தும் "வாருங்கோ! வாருங்கோ! ரொம்பநேரமாயிற்றே, இன்னும் வரவில்லையே என்று எதிர்பார்த்துக்கொண்டே இருந்தேன். எல்லோரும் உள்ளே வாருங்கள்" என்ருர்.

**பணக்காரர்** :—ஏதோ எதிர்பாராதவிதமாய் நேரமாகிவிட்டது. நான் சொல்லியபடி எல்லாம் சரியாகிவிட்டதா? நாளையதினம் அந்த ஸீனை எடுத்துவிடலாமா?

தர்ம :—ஆஹா! தாராளமாய் எடுக்கலாம். சகல ஏற்பாடு களும் வெகு பிரயாசைப்பட்டுச் செய்துவிட்டேன். தாங்கள் மட்டும் நான் சொல்லியதை மறக்கக் கூடாது. குழந்தையை எப்படியாவது சேர்த்துக்கொள்ள வேண்டும்.

பண :—அடாடா! என்ன அப்படிச் சொல்கிறீர்களே? மறப்பதாவது? உங்கள் குழந்தைக்காகவே கதையை மாற்றி அமைத்துவிட்டேன். அதோ இந்த நடிதான் தற்போது நிகரிலாது புகழுடன் விளங்கும் மிஸ் கோகிலா என்பவள். இவளுடைய தங்கையாகத்தான் உங்கள் மகள் நடிக்கப்போகிருள். இதோ இந்தம்மாள்தான் மிஸ் கோகிலாவின் தாயார். அவர்களே கதையிலும் இவ்விரு குழந்தைகளுக்கும் விதவைத் தாயாராய் நடிக்க ஏற்பாடாகிவிட்டது. இதோ இந்த நக்ஷத்திரம் இப்போதுதான் புதிதாக வந்திருக்கிறது. இவள்பேர் மிஸ் சுகுண... என்று அந்த முதலாளி பேசும் வார்த்தைகள் சங்கரன், தங்கம் ஆகியவர்களின் காதில் விழுந்தது தான் தாமதம் நெருப்பை மிதித்தவர்கள்போல் துள்ளினர்கள். "ஐயோ! அநியாயமே" என்ற வார்த்தைகள் ஏககாலத்தில் இருவருடைய வாயிலிருந்தும் வந்தன. "ஹா! தங்கம்! இந்த அவமானத்தை என்னல் தாங்க முடியவில்லையே! தலை சுற்றுகிறதே! புதிய நக்ஷத்திரம் என்று சொன்ன பேர்வழி யார் தெரிகிறதா? பார்த்தாயா? ஐயோ! வெட்கக்கேடே! உன் பெண்ணுடைய மகள் பார்வதிக்கு சுகுண என்று பெயரைமாற்றி இருக்கிருள்" என்று சொல்வதைக் கேட்கும்போதே தங்கம்மாளுக்கு இடிவிழுந்துவிட்டதுபோல் ஆகிவிட்டது.

"என்ன! என்ன! பார்வதியா நிற்பது? அண்ணு! இந்த மானக்கேடைச் சகிக்கமுடியவில்லை. எந்தத் தடியனே கோமளாவின்மீது உராய்ந்துகொண்டு நின்ற கண்ருவியைக்கண்டு பொறுக்க முடியவில்லை. மன்னியின்புத்தி இப்படியா குப்பைத் தொட்டியில் விழுந்துவிட்டது. அவளா விதவைக் கோலம் பூண்டு நடிக்கப் போகிருள். ஐயோ! முடியாது. முடியாது. இதைத் தடுக்காமல் இருக்கமுடியாது" என்று தங்கம்மாள் தாங்கவியலாத ஆவேசத்துடன், "மன்னீ! கோமளா! பார்வதீ!" என்று கூவிக்கொண்டே கூட்டத்தை விலக்கிக்கொண்டு ஓடினள்.

சங்கரனும், தாங்கமாட்டாத ஆத்திரமும், அவமானமும் பீறிக் கொண்டு வந்துவிட்டதால், "அடீ சண்டாளிகளே! குடிகேடி களே!" என்று கூவிக்கொண்டே தங்கம்மாளின் பின்னால் ஓடினார்.

தன்போக்கான உத்ஸாகத்தில் தலைகால் தெரியாமல் கும் மாளம் அடித்துக்கொண்டிருந்த கோகிலா, அவள் தாயார், சுகுணு மூவரும் இந்தப் பெருத்த கும்பலின் மத்தியில் எமதூதர்கள்போல் இவ்விருவரும் ஓடி வருவதைக் கண்டதும் தாங்கள் நிற்கும் பூமியே பிளந்துபோய் தங்களைப் பாதாளத்திற்கு இழுத்துச் செல்வது போலான அதிர்ச்சி யுண்டாகிவிட்டதால், அப்படியே தம்பித்துப் போய்க் கதிகலங்கிப்போய் விட்டார்கள். கூட்டத்திலும் இவர்கள் கூவுதலைக்கண்டு ஒருவிதமான கலவரம் உண்டாகிவிட்டது.

## 5

எதிர்வீட்டுக் கிழவியுடன் சென்ற லீலா ஸ்டேஷன் முற்றிலும் தேடினாள். கிழவி அங்கிருந்தாலன்றோ கிடைப்பாள். லீலா வுக்குப் பயம் அதிகரித்துவிட்டது. "பாட்டி ஒருகால் எங்கேனும் விழுந்து இறந்திருப்பாளோ! அல்லது மனம் வெறுத்து, கண் காணாது ஓடி யிருப்பாளோ!" என்றெல்லாம் தோன்றிவிட்டது. "பாட்டீ! இனிமேல் என்ன செய்வது ?" என்று விசனத்துடன் கேட்டாள்.

பாட்டி :—'லீலா! செய்வதென்ன இருக்கிறது? பெத்தமகனே அவளுக்குச் சத்ருவாய் இருக்கையில், நாம் என்ன செய்யமுடியும்? உங்கப்பன் பார்த்தால், என்னைக் கொன்றுவிடுவான். அவள் தலை யெழுத்துப்போலாகட்டும். நாம் வீட்டிற்குப் போகலாம் வா! நீ ஒரு காரியம் செய். உன் பெரியப்பாவுக்கும் அத்தைக்கும் ஒரு கடிதம் எழுதித் தகவல் தெரிந்துகொள்ளு. அங்கும் இல்லாவிட் டால், பிறகு பார்க்கலாம்' என்று பேசிக்கொண்டே வீடுவந்து சேர்ந்தார்கள்.

லீலா எதிர்வீட்டிற்குச் சென்றவள் இன்னும் வரவில்லையே என்ற ஆத்திரத்துடன் சுந்தரி சற்று நேரம் வீதியிலேயே நின்று பார்த்தாள். அண்டை அயல் வீடுகளுக்குச் சென்றால் தன் கௌரவம் குறைந்துவிட்டதாய் எண்ணும் பேர்வழிகளில் முதல் தாம்பூலம் பெற்றவளாதலால் அங்கு சென்று விசாரிப்பதற்கு மனமின்றிக் கடுவான் பூனையைப்போல் வீதியிலேயே நின்றிருந்தாள்.

கால்மணி, அரைமணிக்கு மேலாகிவிட்டதால் லீலா கண்டிப்பாய்ப் பாட்டியைத் தேடிக்கொண்டுதான் எங்கேயோ போய்விட்டாள் என்று நன்றாகத் தெரிந்துவிட்டது. முன்னிலும் பன்மடங்கு கோபம் அதிகரிக்க முணுமுணுத்துக்கொண்டே உள்ளே சென்றாள்.

லீலா, தான் வந்ததும் அம்மா என்ன திட்டுவாளோ என்கிற பயம் உள்ளூற நடுக்கியவாறே வீட்டிற்குவந்தாள். முன்பக்கத்து ஊஞ்சப்பலகையில் உட்கார்ந்து ஒய்யாரமாய் ஆடிக்கொண்டிருந்த சுந்தரி இவளைக் கண்டதும், "ஏண்டீ! தடிக் கழுதையைப்போல் வயதாயிற்று. கேட்பார், புடைப்பாரற்று நீ எங்கே ஊர் சுத்தப் போய்விட்டாய்? பாட்டியை எந்த எமன் தூக்கிக்கொண்டு போய் விட்டான் என்று நீ வலை போட்டுத் தேடக் கிளம்பிவிட்டாய். உங் கப்பாவுக்குத் தெரிந்தால், உன்னைக் கொன்றுவிடுவார். உனக்கு இத்தனை தைரியமும் அந்தக் கிழப் பிணத்தினால்தான் வந்துவிட்டது.

என்று ஆத்திரத்துடன் கூறிக்கொண்டே போகையில், லீலா இடைமறுத்து, "அம்மா! அனாவசியமாக நீயும் அப்பாவும் பாட்டியைத் திட்டித் திட்டித்தான் அவளைக் கண்மறையத் துரத்திவிட்டீர்கள். உங்களுக்குத்தான் ஆசையில்லையென்றால் என்னையும் எதற்கு அனாவசியமாக உபத்திரவம் செய்கிறாய்? எங்கு தேடியும் பாட்டியைக் காணாததால் எனக்குத் திகிலாகவே யிருக்கிறது. எந்தக் கிணத்திலோ குளத்திலோ விழுந்து இறந்துவிட்டாளோ வென்ற சந்தேகம்கூட உதித்துவிட்டது. அப்படி ஒருக்கால் தற்கொலை செய்துகொண்டிருந்தால், பெற்ற தாயைக் கொலை செய்த பாவம் உங்களை ஏழேழு தலைமுறைக்கும் விடுமா?" என்று கூறும்போது லீலாவின் கண்களில் மளமளவென்று நீர் பெருகிவிட்டது.

சுந்தரி :—சீ ! அதிகப்பிரஸங்கி ! உனக்கு வேதாந்தம் தெரியும் என்ற வித்தையைப் பெற்ற தாயிடமே காட்டுகிருயா? உன் வேதாந்தத்தைக்கொண்டு உடைப்பிலே போடு. ஐயோ பாவம்! உன்பாட்டி தற்கொலைபண்ணிக் கொள்வாளாம். தற்கொலை! பத்து பேரை உருட்டிவிட்டுத்தான் கல்லுபோல நிற்பாளே தவிர சாகமாட்டாள். பயப்படாதே. நான்கு நாளைக்கு வயிற்றுக்கில்லாமல் குடல் காய்ந்தால், ஐந்தாவது நாள் தானே வந்து கதவைத் தட்டுகிருள். அதோ கார் வரும் ஓசைகேட்கிறது. என்னுடைய சினேகிதர்கள் வருவது போலிருக்கிறது. தலையும் வேஷமுமாக மூதேவிபோல நிற்காதே ! போய் நன்ருக அலங்காரம் செய்துகொண்டு வா......என்று கூறி விட்டு வீதிப்பக்கம் எழுந்து ஓடினுள்.

லீலா விசனத்துடன் உள்ளேசென்று கதவைத் தாளிட்டுக் கொண்டு எதிர்வீட்டுப் பாட்டி சொன்னதுபோலத் தன் பெரியப்பாவுக்குக் கடிதம் எழுதத்தொடங்கினுள்.

"அன்புமிக்க பெரியப்பாவுக்கு லீலா அனேக நமஸ்காரம் செய்து எழுதுவதாவது:- இவ்விடம் க்ஷேமம். அவ்விடத்திய க்ஷேமத்தைப்பற்றி எழுதவும். இவ்வளவு நாட்களாக எழுதாமலிருந்துவிட்டு, இன்று நான் உங்களுக்கு எழுதுவதைப் பார்த்தால் தங்களுக்கு ஆச்சரியமாயிருக்கலாம்.

எங்கள் வீட்டுச் சமாசாரமெல்லாம் நீங்கள் அறிந்திருப்பீர்களென்று நம்புகிறேன். நான் பள்ளிக்கூடத்திற்குச் சென்றிருந்தபோது வீட்டில் நடந்த ஏதோ ரகளையின் பயனுல், பாட்டியைக் காணவில்லை. நான் சிறுமியாயிருந்தாலும் அவளைத் தேடக்கூடிய இடமெல்லாம் தேடிவிட்டேன். என் மனம் மிகவும் கவலை கொண்டு தவிக்கின்றது. அப்பா தன் சகபாடிகளுடன் வெளியில் சென்றவர் இன்னும் வரவில்லை. அம்மாவோ இதைக் காதில் போட்டுக் கொள்ளவேயில்லை.. ஒருகால் பாட்டி மனம் வெறுத்துப்போய்த் தங்களிடம் வந்திருப்பாளோ வென்று இதை எழுதுகிறேன். நான் சின்னவள் என்று

அலக்ஷியம் செய்யாது, பாட்டி அங்கு வந்திருக்கிறளா வென்று மறுதபாலில் தெரிவிக்கப் பிரார்த்திக்கிறேன்.

பாட்டியைக் காணுத தவிப்பினுல் இதை எழுது கிறேனேயன்றி, தபால் முத்திரை வாங்குவதற்குக்கூட என் கையில் சில்லரை போதவில்லே. அம்மாவைக் கேட் டால் கொடுக்கமாட்டாள். ஆகையால், என்னிடமிருந்த அரையணுவுக்கு ஸ்டாம்பு வாங்கி ஒட்டியிருக்கிறேன். இது விஷயமாக என்னுல் உங்களுக்கு ஏற்படும் வீண் செலவிற்கு என்மீது கிருபை கூர்ந்து என்னே மன்னிக் கும்படி மன்ருடிக் கேட்டுக்கொள்கிறேன்.

பெரியம்மாவுக்கு என் நமஸ்காரத்தைத் தெரிவித்து மற்றெல்லோரையும் நான் விசாரித்ததாகச் சொல்ல வும். நாளே மறுதினமே தங்கள் பதிலே வெகு ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.

இங்ஙனம்,
வேணும் நமஸ்காரம்
லீலாவதி."

என்று கடிதத்தை எழுதிமுடித்து, அதை எடுத்துக்கொண்டு புறக்கடைப்பக்கமாக அடுத்தவீதியிலுள்ள தபாலாபீஸுக்கு ஓடி, முத்திரைவாங்கி ஒட்டித் தானே போட்டுவிட்டுத் திரும்பினுள். அவளது பாட்டியிடம் உள்ள அளப்பரிய பிரேமையின் வேகம் இந்தக் கடிதத்தை அந்தத் தபால் பெட்டியில் போட்ட உடனேயே பாதி கவலே தீர்ந்ததுபோலும், பாட்டியைக் கட்டாயம் பார்த்து விடுவது நிச்சயம் என்றும் ஒரு உணர்ச்சி தோன்றியது. அவள் அதிக அனுபவம் பெருத சிறுமியாதலால் இதைவிட வேறு என்ன நினேக்கமுடியும்?

வீட்டிற்குத் திரும்பி வரும்போதும் புறக்கடைப் பக்கமாகவே வந்து முன்போல் ஒரு அறையில் சென்று படிப்பவள்போல் புத்த கத்தை எடுத்து வைத்துக்கொண்டாள். ஆனுல், அவளுடைய மனதும், காதுகளும் முன்கட்டுக் கூடத்திலிருந்து வரும் வார்த்தை களில் சென்று லயித்தன.

அந்த வார்த்தைகள் லீலாவின் காதில் விழ விழ அவளுக்குத் திகிலும் பயமும் அதிகரித்ததோடு தன்னைச் சுற்றிப் பெரிய ஆபத்து ஏதோ வந்துவிட்டது போன்ற அபாரமான சங்கடமும் உண்டாயிற்று. 'அவர்கள் இம்மாதிரியான சூழ்ச்சி செய்வதற்கே தன் பாட்டியை அக்கிரமமாக அடித்துத் துரத்திவிட்டார்களோ!' என்றும் அவளுக்குச் சந்தேகம் உண்டாகிவிட்டதால், ஒருவிதமான விபத்துமின்றிக் காப்பாற்றவேண்டுமே என்று கடவுளைப் பிரார்த்தனை செய்தவாறு இடிந்துபோய்விட்டாள்.

## 6

'சிற்றேரி' என்கிற ஊர் கேவலம் நாட்டுப்புறமும் இல்லை ; பெரிய பட்டினமுமில்லை. சில ஆபீஸ்கள், ஜில்லா போர்டு பாடசாலைகள், ஆஸ்பத்திரி முதலியவைகள் இருந்தன. சொந்த நிலங்களையுடையவர்களின், சுமார் 500 வீடுகளும் 2000 குடியானவர்களின் வீடுகளும் நிறைந்த அழகிய சிற்றேரிதான் நமது கதாபாத்திரமாகிய தங்கம்மாளின் பூர்வீகமான பரம்பரை ஊராகும்.

தங்கம்மாளின் பாட்டனார் தலைமுறை முதல் இவ்வூரில் மிக்க செல்வாக்குடனும், கண்ணியமாயும், நன்மதிப்புடனும் வாழ்ந்து வந்தார். தங்கம்மாளின் கணவன் இறக்கும்பொழுது மூன்று குழந்தைகளுடன் தன்னந்தனியாய் நின்றுவிட்ட சமயம் சங்கரனின் உதவியினாலேயே அவள் முன்னுக்கு வந்து பிள்ளைகளைப் படிக்கவைத்தும் பெண்ணைக் கல்யாணம் செய்து கொடுத்தும், பிள்ளைகளுக்கு விவாகம் செய்தும் சகலமும் நடந்தன.

ஆனால், இக் கலியின் கூற்றில் நன்றி மறப்பதுதான் மிகவும் சிலாக்யமானது என்கிற சித்தாந்தத்தையுடைய பேர்வழிகளில் தங்கம்மாளின் மூத்த மகனும், அவனுக்குப் பெண் கொடுத்த வீட்

டாரும் முதன்மை ஸ்தானம் பெற்றுவிட்டதால், அந்த உத்கிருஷ்ட மான கொள்கையைத் தங்கள் அனுஷ்டானத்தில் காட்டவும் தொடங்கிவிட்டார்கள்.

தன் மகளையே ரத்தினத்திற்குக் கொடுத்திருப்பதால் மூத்த மகனை வஞ்சனைசெய்து இளைய மகனுக்கே நிறைய சொத்துக்களைத் திருட்டுத்தனமாகச் சேர்த்துவிடுகிறான்என்கிற வீண் சந்தேகத்தை சங்கரனிடம் கொண்டு அது காரணமாகச் சண்டை வலுத்து விரோதமும் வசையும் முற்றிப்போய் க்ஷாத்திரத்தில் முடிந்துவிட்ட தால் சங்கரன் மனமுடைந்து இவர்கள் முகத்தில் விழிக்காது போய்விட்டார்.

தங்கம்மாளும் மகா யூகசாலியும், புத்திசாலியுமாகையால், பஞ்சாயத்தாரின் முன்பு தன் இரு பிள்ளைகளுக்கும் சொத்துக்களைப் பாகம் செய்து கொடுத்துத் தானும் பழி கழித்துக்கொண்டாள்.

மூத்த மகனாகிய முத்துச்சாமிக்கு, படிப்பும் ஏறுது போய்விட்ட தால், உத்தியோகத்திற்கு லாயக்கற்றுவிட்டது. அவனுடைய மாமனார் ஜாதியில் மார்வாடியாகப்பிறக்கவில்லையேயன்றி வாழ்க்கை யில் முழு மார்வாடியாகி வட்டிக்குவட்டி, அந்தவட்டிக்கும் வட்டி குட்டிப்போடச் செய்வதிலும், ஏழைகளின் ரத்தத்தை உறிஞ்சு வதிலும் மகா சமர்த்தர்.

அந்த அதி யற்புதமானதும், மகா மேன்மையானதும், தர்மார்த்தமானதுமாகிய புனிதமான தொழிலை மருமகனுக்கு வெகு அக்கரையுடன், குருவைவிடச் சிறந்த சிரத்தையுடன் உப தேசம் செய்துவிட்டார். முத்துச்சாமியும் இந்த அரிய வித்தையை வெகு இஷ்டத்துடனும் கனிகரத்துடனும் நன்றாய்க் கற்றுக் கொண்டு விட்டான்.

அவனுடைய சகதர்மிணியாகிய சாவித்திரி பர்த்தாவின் நிழல் போல் தொழில் முறையிலும் விளங்கினாள். காலச் சக்கரத்தின் வேகம் எப்போதும் ஒரே மாதிரியாகச் சுற்றுமா? காலத்தின் கொடுமைக் கேற்ப அந்தக் கிராமத்தில் மழையேயின்றிப் பயிர்கள் அடியோடு தீய்ந்துபோய்விட்டதால், பஞ்சம் மக்களைப் பிடித்து வாட்டத் தொடங்கியது.

பிழைக்க வழியின்றிக் குடியான ஜனங்கள் தத்தளிக்கும் சமயம் அரைவயிறு கஞ்சிக்காக வீட்டிலுள்ள செம்பு தவலை முதல் தாலிக்கூரை முதலிய சீலைகள் வரையில் அந்த மகானுபாவன் முத்துஸாமியிடம் அடகு வைத்து ஒன்றுக்குப் பாதியாகப் பணத்தை வாங்கி, பஞ்சத்தின் கொடிய ஆட்சியில் கால் வயிறு பசியாவது ஆற்றிக்கொண்டார்கள்.

இவைகளைத் திரும்பப்பெறுவதற்கு அந்த ஏழைகளுக்குப் பகவான் கிருபை செய்யாததானது முத்துச்சாமியின் முரட்டுக் காட்டில் பெய்த மழைபோலாகி விட்டது. அந்த ஏழைகளின் பாத்திரங்களையும், மற்ற துணிமணி சாமான்களையும் விற்று இன்னும் கொஞ்சம் செல்வவந்தனுகி விட்டான்.

இந்த அக்ரமமான காரியத்தைக் கண்டு தங்கம்மாளின் மனம் பதறும். ஏழைகளின் வயிற்றெரிச்சல் தீராத துன்பத்தைத் தரும். நீ அவர்களுக்கு முற்றிலும் உதவாவிடினும் இம்மாதிரி அனியாயம் செய்து வாழுவது சரியில்லை என்று தங்கம்மாள் சொன்னுல் அவளிடம் முத்துசாமிக்கும் அவன் மனைவிக்கும் சதா சண்டைதான்.

இந்தத் தொல்லையைச் சகிக்காமல்தான்சின்னமகனிடம் வந்து சேர்ந்தாள். பாகம் பிரிக்கும்போது முத்துச்சாமிக்கு இருந்த சொல்பத்தொகை தற்போது 5 பங்காகப் பெருகிவிட்டது கண்டு அவர்கள் அளப்பரிய சந்தோஷங் கொண்டார்களேயன்றி ஊரார் முற்றிலும் அவன் செயலுக்கு வெறுத்துத் திட்டவாரம்பித்தார்கள்.

இந்த மார்வாடி வட்டியில் மட்டும் சம்பாதிப்பது போதாமல் தரகு வாங்கிக்கொண்டு தக்காருக்குத் தக்கபடி காரியம் செய்யும் தொழிலிலும் நாளடைவில் ஈடுபடவாரம்பித்தான். பணம் சம்பாதிக்கும் ஒரே ஆசையை அந்தத் தம்பதிகள் மேற்கொண்டார்களேயன்றி, கண்ணியம், கவுரவம் முதலிய யாவற்றையும் காற்றில் விட்டுவிட்டார்கள்.

பணத்திற்காக இதுபரியந்தம் முத்துச்சாமியும் அவன் மனைவியும் செய்திருக்கும் பாப க்ருத்யங்களுக்கு ஒரு எல்லையே இல்லை. "ஆகாத்யகாரனுக்கு ஐச்வர்யமும், ப்ரம்மஹத்திக்காரனுக்குப் பிள்ளை குட்டியும் குறைவில்லை" என்பது ஒரு பழமொழி. அவ்விரண்

டின் பலனுகப் பணமும், குழந்தை குட்டிகளும் குறைவின்றிக் கிடைத்துவிட்டன. புலியின் வயிற்றில் பிறந்தது பூனையாகுமா! என் பதுபோல் லோபியின் வயிற்றில் பிறந்தது மட்டும் தர்மவானுகி விடுமா? மகா பாவியாகவே பிறந்துவிட்டன.

முத்துச்சாமியின் மூத்த மகன் கன்னம் வைக்கவும் தயங்காத சுத்த வீரனுய் விளங்கியதால், அவ்வப்போது சிறு சிறு திருட்டுக்களை வெகுசுலபமாகக் கையாண்டு பொருளைச்சந்தோஷத்துடன் பெற்றோரிடம் கொடுப்பான். பெற்றோரும் வெகு ஆனந்தத்துடன் அதை வாங்கி மகிழ்வார்கள்.

கோயிலுக்குச் சென்ருல், பிச்சைக்காரக் குருடனுக்கு ஒரு அணுவைப் போட்டுவிட்டுச் சில்லரை எடுத்துக்கொள்வதாகக் கூறி காலணுவைத் தட்டில் போட்டுவிட்டு நான்கு காலணுவை எடுத்துக் கொண்டுபோய் தினம் கன்னுபின்னு செலவு செய்வதில் பையன் வெகு சமர்த்தாகத் தேறிவிட்டான்.

புகை கிளம்பும்வரையில் நெருப்பு இருப்பது தெரியாதல்லவா! அதேபோலத்தான் முத்துச்சாமியின் குடும்பவாழ்க்கையின்மர்மம் அமைந்து நடந்துவருகிறது. முத்துச்சாமி வழக்கம்போல் சாப்பிட்டு விட்டு தாம்பூல சகிதம் வீதியில் உட்கார்ந்துகொண்டு யார் வரவை யோ வெகு ஆவலாய் எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். உள்ளே இருக்கை கொள்ளாது சற்று நேரத்திற் கொருதரம் சாவித்திரி வாசல்படியில் வந்து, "இன்னும் வரவில்லையா? என் இத்தனை நாழி கையாய்விட்டது?" என்று கேட்டுக்கொண்டே இருந்தாள்.

**முத்து** :— என்னமோ! இன்னும் வரக் காணவில்லையே! மூன்றுமணிக்கே வருவதாகத்தான் சொன்னர். மணி 4-ஆகி விட்டதே என்றுதான் யோசிக்கிறேன்.

**சாவித்திரி** :—தொகை எல்லாம் பேசியாகிவிட்டதா! அல்லது இனிமேல்தான் பேசவேண்டுமா! அதனுல், ஏதாவது தகராறு வந்திருக்குமா!

**முத்து** :—ஊம்...அப்படி எல்லாம் ஒன்றுமில்லை. தொகை விஷயமெல்லாம் முடிந்துவிட்டது. வரும் வழியில் என்ன தகராறோ அது தான் சந்தேகம்,

சாவி :—ஏன் ! பணத்துடன்தானே வருவார்கள். அதில் தகராறு என்ன விருக்கிறது ?

முத்து :— ஐயோ ! அது தெரியாதா ! அந்தச் சோதாப்பயல் ரத்தினமிருக்கிறனே ! அவன்தான் நமக்குப் பெரிய எதிரியாகவல்லவோ இருக்கிறன். அவன் இந்த ரகஸியத்தைத் தெரிந்துகொண்டு வழியில் ஆட்களைவிட்டு அடித்தாலும்அடிப்பானே என்று அந்தமனிதனே கஷ்டப்பட்டான். இத்தனை நேரமாவதால் அதுதான் சற்றுக் கலவரமாயிருக்கிறது.—என்று பேசும்போது, இவனிடம் கடன் வாங்கியுள்ள குடியானவனும் அவன் மனைவியும் பரிதாபத்துடன் அங்குவந்து முத்துச்சாமியை நோக்கி, "சாமீ ! இந்த ஏயெங்களைக் கேவலம் வவுத்துலே அடிச்சூடக் கூடாதுங்க. முதல்தரம் உங்க கிட்ட அடகுவெச்சதெல்லாம் மூழ்கிப்பூடுச்சு. இந்ததரமாச்சும் தயவுபண்ணி ஒரு பத்துரூவா கொரச்சுக்கங்கோ போதும், மீதி பணத்தை இதோ கொணுந்திருக்கறேன். கணக்கைத் தீர்த்துப் புடுங்க" என்ருர்கள்.

முத்து :—அட என்ன சனியன் ! காலையில் அத்தனைதரம் சொல்லியும் உங்களுக்குப் புத்தியில்லே ? நான் முக்கியமாக யார் வரவையோ எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறேன். இப்போது உபத்திரவம் செய்யவாண்டாம். ஒத்தபைசாகூடக் குறைக்க முடியாது. வட்டியும் அசலும் தம்பிடி குறையாமல் வைத்துவிட்டுப் பிறகு பேசுங்கள்.

குடியானவன் :—சாமீ ! இப்படி நிர்த்தாக்ஷிணியமா பேசறது தர்மங்களா ? எங்க வவுறு எரியும்படிப் பண்ணு உங்களுக்கு நல்லதா? எங்களைப்போல ஏயையுங்க வாயிலே மண்ணைப்போட்டு நீங்க மாத்திரம் பொயக்கறது நாயங்களா ? பாவம் புண்ணியம் பாக்கறதுக்குக்கூட உங்களுக்கு மனசு இல்லையா ?

முத்து :—டே அதிகப்பிரஸங்கி ! தாறுமாறுமாக உளறவா இங்கு வந்தே ? மரியாதையாகப் போகிருயா, கழுத்தைப் பிடித்துத் தள்ளட்டுமா ? போடா வெளியே.

குடியானவன் :—ஆமாஞ்சாமீ, உங்களைப்பேல பெரிய மனுசருங்க எங்களைப்பேல ஏயைகளைத்தான் கயுத்தைப்பிடிச்சுத் தள்ளு

வீங்க. ஆரோ ஒரு புண்ணியவான் என்னமோ சட்டம் ஒன்னு கொண்டாரப் போராங்கன்னு சொல்ராங்க. அந்தச் சட்டம் அந்த மாரியாத்தா கிருபைலே எப்போ வருமோ! வந்தா அப்போ தெரியுது உங்கபாடு...என்று சொல்கையில்,

முத்துச்சாமி அடங்காத கோபத்துடன் துணியை இழுத்துக் கட்டிக்கொண்டு, "சீச்சீ! அல்பமே! நீ பெரிய சட்ட நிபுணன்டா. நீ தான் சட்டத்தை எழுதப்போறே; டேய்! என்னை என்ன வென்று நினைத்தாய்? எந்தச் சட்டம் வந்தாலும் உங்கள் கொட்டத்தை அடக்க எனக்குத் தெரியும். மரியாதையா முழுபணத்தையும் வைத்துவிட்டுப் போகிருயா அல்லது நடக்கிறது நடக்கட்டுமா?" என்று கர்ஜித்தான்.

குடியானவனின் மனைவி சற்றுப் பயந்த சுபாவமுடையவளாதலால் எங்கே தன் புருஷனை அவன் அடித்துவிடுவானே என்ற திகிலுடன் கணவனை நோக்கி, "த. இந்தப் பிசினிகிட்ட என் வீணு சண்டைபோடரே? எயுங்க வவுத்திலே அடிச்சு பொயக்கரவங்களுக்கு ஈவேது? இரக்கமேது? இன்னிக்கி நம்பளெத்தான் மெரட்டுவாரு. நாளைக்குக் கடவுளைகூட மெரட்டுவாரான்னு கேளு. மூஞ்சிலே சொழட்டிப் போட்டுட்டு வந்துடு. 50 ரூவான்னு எழுதிகிணு 30 ரூவா குடுத்துப்பூட்டு முழுக்க கேக்கிற இந்த அக்குருமம் எந்த தெய்வத்துக்குப் பிரீதி? (முத்துவைப் பார்த்து) இந்தா பணம். என் சொத்தைக் கொணுந்து குடு" என்று கூறிக்கொண்டே நோட்டுகளை அவன் காலடியில் வீசி எறிந்தாள்.

பணத்தைப் பொறுக்கிக்கொண்டு முத்துச்சாமி அவர்கள் அடகுவைத்த பொருளைத் திரும்பிக் கொண்டுவந்து அவர்களிடம் கொடுத்துவிட்டான். குடியானவர்களும் வயிறெரிய வைது கொண்டே சென்றுர்கள்.

தம்பதிகளிருவரும் பணத்தை எண்ணி வைத்துவிட்டு, சந்தோஷமாகப் பேசிக்கொண்டிருக்கையில், வீதியில் ஒரு வண்டி வந்து நின்றது. அதிலிருந்து தடித்த மனிதன் ஒருவன் இறங்கினுன்.

முத்து, "அடாடா! வரணும்!வரணும்! தங்களைத்தான் வெகு நேரமாக எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறேன். உட்காருங்கள்"

என்று உபசரித்து, "சாவித்திரி! முதலில் காபி பலகாரம் கொண்டுவா" என்று தன் மனைவியை உத்தரவிட்டான்.

**வந்தவன் :**—நான் இப்போதுதான் சாப்பிட்டுவிட்டு வருகிறேன். அதெல்லாம் ஒன்றும் வேண்டாம். சும்மா உக்காருங்க. சுவாமியாரிடம் தங்களைப்பற்றி எவ்வளவு சொல்லமுடியுமோ அவ்வளவும் சொல்லிவிட்டேன். இந்தக் காரியம் உங்களால்தான் முடியும் என்று அவர் உங்களிடம் பரிபூர்ண நம்பிக்கை வைத்துவிட்டார்.

**முத்து :**—அதுக்கென்ன, என்னால் முடிந்தவரையில் எந்த காரியமும் செய்யத் தயாராயிருக்கிறேன். இன்ன காரியம் என்னாலாகவேண்டுமென்று சொல்லாமலேயே பேசுகின்றீர்களே! விஷயத்தைச் சொல்லுங்கள்.

**வந்தவன் :**—விஷயத்தை விவரமாகச் சொல்வதற்காகத்தான் சாவகாசமாக வந்திருக்கிறேன். விஷயம் ரொம்ப ரகஸியமாக இருக்கவேண்டும். நம் இரண்டு மூன்று பேரைத் தவிர வேறு யாருக்கும் தெரியக்கூடாது.

**முத்து :**—என்னைப்பற்றித் தாங்கள் இன்னும் அதிகம் தெரிந்து கொள்ளவில்லையென்று நினைக்கிறேன். கிணற்றில் போட்ட கல்லை யாவது துளாவி எடுத்துவிடலாம். என்னிடம் சொல்லிய சமாசாரத்தை ஈசன்கூட அறியமுடியாது. பயப்பட வேண்டாம். தாராளமாகச் சொல்லுங்கள்.

**வந்தவன் :**—நம்முடைய சுவாமியார் அபூர்வமான மருந்துகள் செய்வதில் ஆராய்ச்சி செய்து கைதேர்ந்தவர் என்பதை நீங்கள் அறிந்திருக்கலாம். தற்போது அவர் ஆராய்ச்சிமுறையில் வெகு அவசியமான பொருள் ஒன்றிருக்கிறது. அது தங்களால்தான் முடியும். அதாவது, எட்டு மாதத்திற்கு மேல்பட்ட தலைச்சன் கர்ப்பிணி ஒருத்தி தேவை. அந்தப் பெண்ணுடைய தாயார், பாட்டி ஆகிய மூன்று வர்க்கமும் தலைச்சனாகவே இருக்கவேண்டும். இந்த உண்மையை ஆராய்ந்து ரகஸியமாகத் தேடிக்கொடுப்பதற்காக உங்களுக்கு இனாம் பத்தாயிரம் ரூபாய் கொடுப்பதாகச் சொல்லச் சொன்னார்—என்று கூறி முடிப்பதற்குள், முத்துச்சாமி

பெரிய அதிர்ச்சியினால் தாக்கப்பட்டவனாய், "ஐயையோ! இதென்ன! மூன்று தலைமுறை தலைச்சனாக வந்த கர்ப்பிணி தேவையா? நான் விஷயம் இப்படி இருக்கும் என்று எதிர்பார்க்க வில்லையே!" என்று ஒருமாதிரியான திகைப்புடன் கூறினான். சாவித்திரியும் பதட்டத்துடன், "என்ன, என்ன! பூர்ண கர்ப் பிணியா?" என்று நடுங்கியவாறு கேட்டாள்.

வந்தவன் இவர்களுடைய மனோபாவம் முற்றிலும் அறிவா னாகையால் இவர்களுடைய மனப்பிராந்தியை மாற்றும்பொருட்டு ஆயிரம் ரூபாய் நோட்டுகளாகப் பத்து நோட்டுகளை எடுத்து வரிசை யாக அவர்கள்முன் வைத்தான். 'பணம் என்றால் பிணமும் வாய் திறக்கும்' என்ற பழமொழி இவர்களிடம் மெய்யாகுமா அல்லது பொய்யாகுமா என்ற பிரச்னை வந்தவனின் மனத்தில் எழுந்தது.

## 7

'கோபி! நீ கொடுத்த நம்பர்களின் ரிஸல்டெல்லாம் பார்த்துக் கொண்டு வந்துவிட்டேன். 2 நம்பர்தான் கோட்ட டித்துவிட்டது. மற்றெல்லாரும் பாஸ்தான்' என்று ஒரு மாணவன் சொல்லும்போது, மற்றவர்கள் அவனைச் சுற்றிக்கொண்டு "எந்த நம்பர்கள் பெயிலாகி விட்டன?" என்று ஒருவிதமான பதைப் புடன் கேட்டார்கள். "பதறாதீர்கள். நீங்க ளெல்லோரும் பாஸ் தான். ஐயோ பாவம்! ரொம்பவும் மனக்கோட்டை கட்டிக் கொண்டிருந்த பிச்சுவுக்கும், விச்சுவுக்கும்தான் தவறிவிட்டது. நம் முடைய லெட்டரை நாளைக்கு ஆவலாய் எதிர்பார்ப்பார்கள். நாமென்ன எழுதுவது?" என்று ராமு வெகு அனுதாபத்துடன் சொன்னான்.

கோபி:—என்னமோ, நீ அவர்களுக்காக அனுதாபப்படுகிறாய். மற்றவர்களோ கும்மாளமடிக்கிறார்கள். எனக்கென்னவோ பிச்சு, விச்சு பாடுதான் நிம்மதியென்று தோன்றுகிறது.

ராமு:—இதென்ன கோபி! உன்னுடைய வார்த்தையே புதுவித மாயிருக்கிறது. தோல்வியடைந்தவர்களைப் பற்றியா நீ சந்தோஷப் படுகிறாய்?

கோபி:—ஆமாம். உண்மையில் சந்தோஷப்படுகிறேன். என் தெரியுமா? நமக்கெல்லாம் இந்தப் பரீக்ஷையுடன் படிப்பு முடிந்து விட்டது. இனிமேல் நாமும் வேலையில்லாதார் ஜாபிதாவில் சேர்ந்து விட்டோம். படி ஏறி இறங்கும் உத்தியோகம்தான் முதலில். உத்தியோகம் கிடைப்பதுதான் இக்காலத்தில் குதிரைக்கொம்பாயிருக்கிறது. கலியாணமானவர்கட்கோ 'மாப்பிள்ளை என்ன செய்கிறான்' என்ற கேள்விக்கு, "சாப்பாட்டு ராமனாய் உட்கார்ந்திருக்கிறான்" என்ற பட்டம் கிடைத்துவிடுகிறது. கலியாணமாகாதவர்கட்கோ பெற்றோரின் சலிப்பும், குடும்பத்தில் அலக்ஷியமும், தொல்லையும் இன்னும் பலவித உபத்திரவங்களும் ஏற்படுகின்றன. இந்த மாதிரியான தொல்லைகள் பிச்சுவுக்கும், விச்சுவுக்கும் இன்னும் ஒரு ஆறு மாத காலத்திற்கு இல்லை யல்லவா? அதற்காகத்தான் சந்தோஷமென்றேன்.

சோமு:—கோபீ! நீ சொல்லுவதைப்பார்த்தால், சில தினங்களுக்குமுன் "பட்டமோ பட்டம்" என்ற புஸ்தகத்தைப் படித்தோமே அதிலுள்ளதுபோல நீ கூடச் செய்ய ஆரம்பித்துவிடுவாய் போலிருக்கிறதே!

கோபி:—ஆமாம். ஏன் செய்யக்கூடாது? நம்முடைய ஜீவனம் மானமாக நடக்கவேண்டுமென்றால், எந்தத் தொழிலைத்தான் கண்ணியமாகச் செய்ய முடியாது? உண்மையில் எனக்கு நியூஸ் பேப்பர் விற்கும் வேலை கிடைத்தால்கூட இந்த நிமிஷமே ஒப்புக்கொள்ள நான் தயாராயிருக்கிறேன்.

வேணு:—(ஆச்சரியத்துடன்) கோபீ! நிச்சயமாக நீ தெருத் தெருவாய் பேப்பர் விற்றுக்கொண்டே போவாயா? இது நடக்கிற காரியமா? வீதியில் கூவிக்கொண்டு போவாயா?

கோபி:—இது நடக்காத காரியமாயிருந்தால் நான் சொல்லவே மாட்டேனே! வீதியில் கூவிக்கொண்டு போவதற்கே நீ ஆச்சரியப்

படுகிருயே; ரயில்வேஸ்டேஷனில் போர்ட்டர் வேலை கிடைத்தால் கூட நான் சந்தோஷமாகச் செய்வேனே!

ராமு :—என்னது? போர்ட்டர் வேலையா? இத்தனை படிப்பும் படித்துவிட்டு, போர்ட்டர் வேலையா? என்ன! ஸ்டேஷன்களில் மூட்டையா தூக்கப்போகிருய்?

கோபி :—போடா பயித்தியக்காரா! வெளியூர்களிலிருந்து வரும் தமிழ் தெரியாதவர்கட்கு ஆங்கிலத்தில் பேசி, அவர்களுக்குச் சகல சௌகரியமும் செய்துகொடுத்தால், இன்னும் கால்காசுகூட வரும் தெரியுமா?

வேணு :—சரி! சரி! ஏதேது, இவன் மிகவும் அதிகமாகப் பேசிக்கொண்டே போகிருன். நம்முடைய ப்ளானுக்கும் இவனுடைய எண்ணத்துக்கும் எள்ளளவும் ஒத்துக்கொள்ளாது.

கோபி :—அப்படிப்பட்ட பிளான் நீங்கள் என்னப்பா போட்டிருக்கிறீர்கள்? கொஞ்சம் சொல்லுங்கள். நானும் கலந்துகொள்ள முடியுமா பார்க்கிறேன்.

வேணு :—என்ன ப்ளானு? எப்பேர்ப்பட்ட ப்ளான் தெரியுமா? காலத்துக்கு ஏற்றுப்போல் கோலம். தற்கால உலகம் சினிமா மயமாக விருக்கிறதே அது தெரியவில்லையா?

கோபி :—என்ன? சினிமாவா? அதில் நடிக்கப் போகிறீர்களா?

வேணு :—ஆம்; சினிமாதான். நடிப்பதுமாத்திரமல்ல. இப்போதுதான் 'தடி எடுத்தவன் எல்லாம் வேட்டைக்காரன்' ஆகி விடுவதுபோல, பேனுப் பிடித்தவரெல்லாம் சினிமாவுக்குக் கதை எழுதவும், வசனங்கள் எழுதவும், பாட்டுக்கள் இயற்றவும் முற்பட்டு விடுகிருர்கள். நாமென்ன படித்தவர்கள் அல்லவா? ஏன் நாமும் ஆசிரியர்களாகிவிடக்கூடாது?

கோபி :—அப்பா! என்னை அதீதமாகப் பேசுவதாகச் சொன்னுயே! இப்போது உன் கொள்கை அதீதமா, என்னுடைய கொள்கை அதீதமா யோசித்துப்பாரு! கவிகளாக ஆகிவிடுவதும், ஆசிரியர்களாக ஆகிவிடுவதும் கிள்ளுக்கீரை யென்று நினைத்தாயா?

நான் சொல்லியபடியே உருமாலையெடுத்து முண்டாசாகக் கட்டிக் கொண்டு போர்ட்டர் வேலை செய்து காசைக் கொண்டுவந்து காட்டிவிடுவேன். ஆனால், நீ உடனே ஆசிரியராகி விடமுடியுமா?

**வேணு :**—ஏன் ஆகிவிட முடியாது? நான் என்ன முட்டாளா? பட்டம் பெற்றவன் அல்லவா?

**கோபி :**—புஸ்தகத்திலுள்ள பாடங்களைக் கிளிப்பிள்ளைபோலப் படித்துப் பரீக்ஷையில் தேறுவதற்கும், கற்பனைக்கும் என்ன சம்பந்தம்? எத்தனைபேர் கத்திரிக்கோல் கதைகள் தயாரித்துவிட்டு, தங்களுடைய அபாரமான கற்பனை சிருஷ்டி என்று கூறிக்கொண்டு, பல்லை இளித்துக்கொண்டு, சினிமாக்காரர்கள் பின்னாலேயே திரிகிறார்கள் தெரியுமா? நீ அதைப் பார்த்ததில்லையா? அந்தக் கோஷ்டியில் நீங்களும் சேரவேண்டுமென்பது உங்கள் விருப்பமா?

**சோமு :**—ஆசிரியராக ஆகாவிட்டால் என்ன? எப்படியாவது அதில் சம்பந்தப்பட்ட தொழில்களில் இறங்கிவிட்டால், கொஞ்ச நாளில் நுணுக்கங்களைக் கற்றுக்கொண்டு, ஸினிமா டைரெக்டராய்க் கூட வந்துவிடலாமே!

**கோபி :**—அடாடா! நீங்களெல்லாம் பெரிய சூரப் புலிகள். ஒரு படத்தில் அபாரமான வெற்றியடைந்த டைரெக்டர் மறுபடத்தில் விழுந்துவிடுவதைத் தினமும் பார்த்துவருகிறோம். இந்த எலிக் குஞ்சுகளெல்லாம் போய் மலையைப் புரட்டிவிடப் போறதாக்கும். ஏதோ காரியாம்சத்தில் சாத்தியமானதைப் பேசி, பிழைக்க வழி பாருங்கள்.

**வேணு :**—அடேயப்பா! கோபிக்கு ஸினிமா என்றாலே வேப்பங்காயா யிருக்கிறது. இல்லாத பொல்லாத எடக்குகளெல்லாம் பேசுகிறான். அவனுக்குமட்டும் அந்தத் தொழிலிடத்தில் வைராக்கியமே தவிர, வீட்டிலென்னமோ அவன் வார்த்தைக்கும் வைராக்கியத்துக்கும் தம்பிடி மதிப்புக்கூட இல்லை.

**ராமு :**—ஓஹோ! அதனாலேதான் அவன் தங்கை ஸினிமா ராணியாகப் போகிறாள்!

**சோமு** :—நாகரிகத்திற்குத் தகுந்தாற்போல கர்நாடகப் பெயராகிய "பார்வதி" என்பதைக்கூட மாற்றி, நவீனமாக புதுப்பேர் வைத்துவிட்டார்கள்.

**கோபி** :—டேய்! என்ன தலைகால் தெரியாமல் ஆளுக்கு ஒரு பேச்சு அளந்து கொட்டுகிறீர்கள்? நாக்கை உள்ளே அடக்கிப் பேசுங்கள். பத்திரம். என் தங்கையா ஸினிமாவில் நடிக்கப் போகிறுள்?

**வேணு** :—நடிக்கப்போகிறுள் என்பதில்லையப்பா! நடித்துக் கொண்டு இருக்கிறுள் என்று ஆயிரம் ரூபாய் பந்தயம் வேண்டுமானுலும் கட்டிச் சொல்லுகின்றேன்.

**கோபி** :—வீணுக விளையாடாதே! விளையாட்டே வினையாகி விடும். நீ சொல்வதெல்லாம் சுத்தப் பொய். அநியாயமாய் நீ ஆயிரம் ரூபாயை இழக்கத்தான் போகிறுய்.

**வேணு** :—அந்தப் பயமே எனக்கு இல்லை. நீ இழக்கப் போகிறுயா? நான் இழக்கப்போகிறேனு? என்பது தானுக வெளியாகி விடும். '**மிஸ் சுகுணு**' என்று பெயரை மாற்றிவைத்துக்கொண்டு, **தடபுடல் டாக்கீஸ்** கம்பெனியாரிடம் ஒப்பந்தம் செய்துகொண்டு, இப்போது அவள் நடித்துக்கொண்டிருக்கிறுள். இது நிஜமானுல், நீ பணத்தை உடனே கட்டிவிடவேண்டும். இது பொய்யானுல் நான் உனக்கு எப்படியாவது கட்டிவிடுகிறேன்.

இவ்வாறு வேணு சபதஞ்செய்து கூறுவதைக் கோபிநாதனுல் தாங்கமுடியாமல், "வேணு! கொஞ்சம் இரு. நான் என் ஊருக்குச் சென்று இப்போதே இவ்விஷயத்தைத் தீரத் தெளியத் தெரிந்து கொண்டு வந்தால்தான் என் மனம் நிம்மதி யடையும்" என்று கூறிக்கொண்டே அவ்விடத்தைவிட்டுப் புறப்பட்டான். வேணு கோபியை நோக்கி, "ஆயிரம் ரூபாயுடன்தான் என்னைச் சந்திக்க வேண்டும் தெரியுமா?" என்று சொல்கையில், மற்றவர்கள் ஏளனமாகச் சிரித்தார்கள். அந்தச் சிரிப்பு கோபியின் மனத்தில் ஈட்டி பாய்வதுபோலிருந்தது. அவன் பதில் பேசாது மறைந்தான்.

இதே கலவரத்துடன் மறுநாள் காலை கோபி தன் பெற்றோர் இருக்கும் இடத்தை அடைந்தான். வழக்கத்திற்கு விரோதமாக

இவ்வளவு நாள் இல்லாத புதிய முறையில் அவனுடைய சிறிய தங்கைகளுக்குத் தலையை, "பாப்" செய்தும், முழங்காலுக்குமேல் கௌன்கள் போட்டும் அலங்காரம் செய்திருப்பதைப் பார்த்ததும், அவனுக்குத் தூக்கிவாரிப்போட்டது. "ஆறு மாதங்களுக்குள்ளா இவ்வளவு மாறுதல்கள்!" என்று பிரமித்தான்.

குழந்தைகள் ஓடிவந்து, "கோபியண்ணா! பார்த்தயா! புது கௌன்! நாங்கள் வெள்ளைக்காரக் குழந்தைகள்மாதிரி அழகா ஆயிட்டோம் பாத்தயா?" என்று தம் சந்தோஷத்தைத் தெரிவித்தன. குழந்தைகளிடத்தில் எவ்வளவோ ஆசையாய் உள்ள கோபிக்கு அவர்களுடைய அலங்காரத்தையும் தடபுடலையும் பார்த்தவுடனே வேணுவின் பந்தயம் எங்கு நிஜமாகிவிடுமோ என்ற கவலையே தலைதூக்க ஆரம்பித்தது. குழந்தைகளுக்குத் தனியாக ஒன்றும் பதில் சொல்லாமல், உள்ளே வந்தான். "பார்வதி! பார்வதி!" என்று கூப்பிட்டான்.

அவன் எப்பொழுது லீவுக்கு வந்தாலும் பார்வதி வெகு அன்புடன் எதிர்கொண்டழைப்பது வழக்கமாகையினால், அன்று வழக்கத்திற்கு விரோதமாய் அவளைக் காணாததே கோபிக்கு மிக்க சந்தேகத்தைக் கொடுத்தது.

கோபி இப்பொழுது வருவான் என்றதையே எதிர்பார்க்காதிருந்த அவனுடைய தாயாருக்குத் திடீரென்று அவனுடைய குரலைக் கேட்டதும் தூக்கிவாரிப் போட்டது. அவனுக்குச் சினிமா என்றாலே பிடிக்காது என்று அவளுக்குத் தெரியுமாதலால், 'பார்வதி விஷயத்தை எங்கே குழந்தைகள் வெளியிட்டு விடுங்களோ!' என்கிற கவலையுடன் ஓடிவந்து, "வாடாப்பா! கோபீ! என் ஒரு கடிதங்கூடப் போடவில்லை? உடம்பு ஒன்றுமில்லாதிருக்கிறாயா?" என்று குசலப் பிரச்னம் விசாரித்தபடியே குழந்தைகளைக் கண் ஜாடையினால் துரத்திவிட்டாள்.

**கோபி**:—அம்மா! எனக்கு உடம்பு ஒன்றுமில்லை. என்னமோ உங்களை எல்லாம் பார்க்க வேண்டுமென்ற ஆசை அடித்துக் கொண்டது. அதோடு துர்ச்சொப்பனமும் கண்டேன். அதனால்

ஓடிவந்துவிட்டேன். பார்வதி எங்கே காணவில்லை ?—'பார்வதீ! பார்வதீ !' என்று மீண்டும் கூப்பிட்டான்.

மரகதத்திற்குக் குழப்பமும் பயமும் அதிகரித்துவிட்டன. எதையோ சொல்லிச் சமாளிக்க எண்ணியவளாய், 'பார்வதி ஊரில் இல்லையேப்பா ! மாமா வீட்டிற்குப் போயிருக்கிறாள்' என்றாள்.

கோபி :—மாமா வீட்டிற்கா! எந்த மாமா வீட்டிற்குப் போயிருக்கிறாள் ? மாமாவுக்கும் உனக்குந்தான் பேச்சு வார்த்தை கூட இல்லையே ! அப்படி இருக்க அவள் ஏன் அங்கே போனாள் ?

மரக :—சின்ன மாமா வீட்டிற்குத்தான் போயிருக்கிறாள். லீலாவுடன்கூட இருக்க மிகவும் ஆசைப்பட்டாள். அவளும் இவளை வரும்படிப் பல கடிதங்கள் போட்டுவிட்டாள். அதனால், அனுப்பினேன். சொந்த மனிதர்களுக்குள்ளே பேச்சு வார்த்தை இல்லாவிட்டாலே விட்டுவிடுமா ? இப்படித்தான் இருக்கும். வாடாப்பா ! காப்பி சாப்பிட வா !—என்றாள்.

இந்த வார்த்தைகளை அவனால் நம்பமுடியவில்லை. முகாலோபம் செய்யவும் வெறுத்திருந்த மனிதனின் வீட்டிற்கு அவளை யனுப்பியிருப்பதானது நம்பத்தக்கதல்ல வென்று உடனே அவன் மனம் அறிந்துகொண்டுவிட்டது.

தற்செயலாய் கூடத்தில் பார்க்கையில், பார்வதியின் புகைப் படம் இரண்டு மூன்று தினுசில் எடுத்து மாட்டப்பட்டிருந்ததைப் பார்த்துவிட்டான். அப் புகைப் படத்தின் ஜோரே அவளை ஓர் ஸினிமாக்காரி என்று பளிச்சென்று காட்டுவதுபோல் தோன்றியதும், அவன் மனத்தில் ஆத்திரம் பொங்கி எழுந்தது.

மகனுடைய கண்ணோட்டத்தை யறிந்த மரகதத்திற்கு உள்ளுக்குள் குடல் நடுங்குகிறது. எனினும், அதைச் சமாளித்துக் கொண்டு, "என்ன பார்க்கிறாய் ? பார்வதியை மணப்பதற்காக நல்ல வரன்கள் வந்தன. அவர்கள் பெண்ணைப் படமெடுத்து அனுப்பும்படிக் கேட்டார்கள். அப்படியெடுத்து அனுப்பியதில் நமக்கு ஒரு காப்பி எடுத்து வைத்துக்கொண்டேன். பார்வதி, நேரில் பார்ப்பதைவிட படத்தில் மிகவும் அழகாய் இருக்கிறாளல்லவா ?...

என்று மரகதம் கூறும்போது, வாசலில் தந்தி ப்யூன் ஒருவன் வந்து "மரகதத்தம்மாள்! தந்தி! தந்தி!" என்று கூவினான். இந்த வார்த்தையைக் கேட்டதும் மரகதத்தின் தலையில் மலை புரண்டது போலான அதிர்ச்சி ஏற்பட்டுவிட்டது.

இதற்குள் கோபி, "என்ன! அம்மாவுக்கா தந்தி!" என்று ஒருவிதமான ஆத்திரத்துடன் தானே சென்று தந்தியை வாங்கிப் படித்ததுதான் தாமதம். கோபியின் கண்கள் தீப்பொறி பறக்கப் பல்லைக் கடித்துக்கொண்டு, "அம்மா! பார்வதி லீலா வீட்டிற்குப் போயிருக்கிறாளென்ற பொய்மூட்டை இப்போதே சிதறிவிட்டதே! உன் அருமை மகள் மிஸ். சுகுணாவாகிய ஸினிமா ராணிக்கு ஏதோ ஆபத்து வந்துவிட்டதாம். உடனே உன்னை வரும்படியாக ஸினிமா முதலாளி இதோ தந்தி யடித்திருக்கிறான். இந்தா, தந்தி. தூத்து! இத்தகைய பேமானி வாழ்க்கையில் நீ இறங்கிவிட்டதானது என்னுயிரே போய்விடும்போலிருக்கிறது. கானல் நீரைக் கண்டு ஏமாறும் மானின் கதி உங்களுக்கும் வந்துவிட்டது. ஐயோ! வெட்கம்! வெட்கம்!" என்று கோபி தலையில் அடித்துக்கொண்டான். இதைக் கேட்ட மரகதத்திற்கு "ஹா ஆபத்தா?" என்று அலறியபடியே மூர்ச்சையாகி, அவள் சீரம் வெட்டிவீழ்த்திய மரம் போலக் கீழே சாய்ந்தது.

183033

பெரிய படிப்புப் படித்துப் பட்டங்களைப் பெற்றுவிட்டு வேலை இல்லாது திண்டாடுபவர்களின் பரிதாபகரமான வாழ்க்கையை அதியற்புதமாய் சித்தரித்துக் காட்டும்

**பட்டமோ பட்டம்**

அல்லது **காலத்தின் கோலம்**

என்கிற துப்பறியும் நாவலை வாங்கிப் படித்து இன்புறுங்கள்.

விலை அணா 10. சந்தாநேயர்களுக்கு அணா 8.

# அன்பர்களுக்கு அரிய சந்தர்ப்பம்

## தவறினால் மறுபடியும் வாய்க்காது

### கொஞ்சம் பிரதிகளே கைவசமிருக்கின்றன

நமது புதிய சந்தா நேயர்கள் கடந்த ஆண்டு சஞ்சிகைகளில் வெளியான நாவல்களையும் சந்தா விலைக்கே கொடுக்கும்படிக் கேட்கிறார்கள். ஆனால், சஞ்சிகையாக அனுப்பும் தபாற் செலவைவிட தனிப் புத்தகமாக அனுப்புகையில் இரண்டத்தனைக்கு மேலாகச் செலவாகின்றதால், நாம் புத்தகத்தின் விலையை அதிகமாக்க அவசிய மேற்படுகின்றது. அடியிற் கண்ட சில நாவல்கள் மாத்திரம் சஞ்சிகை ரூபமாகக் கொஞ்சம் காபிகள் இருப்பதால், அவற்றைச் சஞ்சிகை விலைக்கே கொடுக்க ஏற்பாடு செய்துள்ளோம். அன்பர்கள், தங்களுக்கு வேண்டிய நாவல்களின் விலையை முன்பணமாக உடனே அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

| | சஞ்சிகை விலை. | தனி நாவல் விலை. | | சஞ்சிகை விலை. | தனி நாவல் விலை. |
|---|---|---|---|---|---|
| வானக்குயில் | ரூ. 0 10 | ரூ. 1 4 | நளினசேகரன் | ரூ. 0 4 | ரூ. 0 8 |
| ஜீவியச் சுழல் | 0 10 | 1 4 | புத்தியே புதையல் | 0 6 | 0 14 |
| மாலதி | 0 4 | 0 8 | ஆனந்த ஸாகர் | 0 4 | 0 8 |
| சந்திரமண்டலம் | 0 8 | 1 0 | தியாகக்கொடி | 1 2 | 2 0 |
| பரிமளகேசவன் | 0 10 | 1 4 | மங்களபாரதி | 1 0 | 2 0 |

# சந்தா நேயர்கள் கவனிக்கவும்

நமது சஞ்சிகையை ஆங்கில மாதம் முதல் தேதி யன்று இந்தியா, ஸிலோன் ஊர்களுக்கும், முதல் வியாழனன்று பர்மாவுக்கும், முதல் வெள்ளியன்று மலேயா முதலிய வெளிநாட்டிற்கும் அனுப்புகிறோம். ஒரே ஊரில் ஒருவருக்குக் கிடைத்து மற்றவர்களுக்குக் கிடைக்கவில்லை யென்றால், அது தபாலில்தான் தவறி இருக்க வேண்டும் என்பதை நேயர்கள் கவனிக்கவேண்டும். 10-ந் தேதிக்குள் சஞ்சிகை கிடைக்காத உள்நாட்டு நேயர்களும் 15-ந் தேதிக்குள் கிடைக்காத வெளிநாட்டு நேயர்களும், உடனே தெரிவித்தால் மறுபடியும் அனுப்புகிறோம்.

வீண் விளம்பரமல்ல......

# வத்ஸகுமார்

அணு 8· சந்தாநேயர்களுக்கு அணு 6

ஆனால், நீங்கள் தின சரி வாழ்க்கையில் காணும் அநுபவம், முடிவு வரை ஊகிக்க முடியாத ஆச்சரியம், அடக்க வியலாத சிரிப்பு மிகுந்த சிறந்த சமூகக் கதை.

## ஒரு ரூபாய்க்கு 3 நாவல்கள்

உளுத்த இதயம்
மகிழ்ச்சி உதயம்
வத்ஸகுமார்

தனி விலை ரூ 1-6-0
முன்பண மனுப்பினால்
தபாற் செலவு இனாம்

"JAGANMOHINI" Vol. XVI No. 6. Regd. No. M




தலைவலிக்கு




ஆஸ்பிரினை விலக்குங்கள்
இருதயக் கோளாறுகளையும்
விலக்குங்கள்

அம்ருதாஞ்சனை
உபயோகியுங்கள்

எல்லா வலிகளையும், சுளுக்குகளையும்
சொஸ்தப்படுத்துகிறது.

அம்ருதாஞ்சன் லிமிடெட்.,

சென்னை கல்கத்தா பம்பாய்


Printed & Published by V. M. Parthasarathy
at "Jaganmohini" Press, 26, Car St, Triplicane, Madras.